


தினபூமி
thinaboomi.com








போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்களையும் நிராகரித்தது ஹமாஸ் அமைப்பு
...2-ம் பக்கம்

அயோத்தியில் ராம நவமி விழா: ராமர் நெற்றியில் சூரிய ஒளிபடும் அபூர்வ நிகழ்வு
...3-ம் பக்கம்

ஐ.பி.எல்.லில் முக்கிய மைல்கல்லை எட்டிய சென்னை அணி வீரர்கள் எம்.எஸ். டோனி, ருதுராஜ் கெய்க்வாட்
...7-ம் பக்கம்





தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று, சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில், வடசென்னை பாராளுமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் டாக்டர் கலாநிதி வீராசாமிக்கு ஆதரவாக திறந்தவெளி வாகனத்தில் பிரசாரம் மேற்கொண்டார்.

# கொளத்தூரில் திறந்த வாகனத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம்

சென்னை, ஏப். 17-

கொளத்தூரில் திறந்த வாகனத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார்.

தமிழகத்தில் பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் பிரசாரம் இன்று (ஏப். 17) மாலை 6 மணியுடன் நிறைவடையவுள்ள நிலையில், அனல் பறக்கும் பிரசாரன் நடைபெற்று வருகிறது. தனது சட்டப் பேரவைத் தொகுதியான கொளத்தூரில் முதல்வரும் கட்சியின் தலைவருமான மு.க. ஸ்டாலின் நேற்று திறந்த வாகனத்தில் பிரசாரம் மேற்கொண்டார்.

வடசென்னை தொகுதி திமுக வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து திறந்த வாகனத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரசாரம் மேற்கொண்டார். மேலும், மக்களை நேரடியாக சந்தித்து துண்டு பிரசாரமும் செய்தார். இதனைத் தொடர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர் மக்களவைத் தொகுதிக்கு உள்பட்ட இடங்களில் நேற்று பிரசாரம் மேற்கொண்டார்.

ஆட்சி, அதிகாரம் தேவையில்லை,

# எங்களுக்கு மக்கள்தான் தேவை: சேலத்தில் இ.பி.எஸ். பிரசாரம்

சேலம், ஏப். 17-

பாராளுமன்றத்தில் சுதந்திரமாக பேச வேண்டுமென்றால் தனித்து போட்டியிட வேண்டும் என்று தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, ஆட்சி, அதிகாரம் தேவையில்லை, எங்களுக்கு மக்கள்தான் தேவை என்றும் அவர் தெரிவித்தார்.

சேலம் மாவட்டம் மேச்சேரியில் தருமபுரி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் அசோகனை ஆதரித்து, அக்கட்சி பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று தேர்தல் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:-

எங்களுக்கு ஆட்சி, அதிகாரம் தேவையில்லை, மக்கள் தான் தேவை. பாராளுமன்றத்தில் சுதந்திரமாக பேச வேண்டுமென்றால் தனித்து போட்டியிட வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த அரசாணை வெளியிட்டேன். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஒரே கட்சி அ.தி.மு.க. ஆட்சி மாறத்தால் எதையும் செய்ய முடியவில்லை. நீட் தேர்வை கொண்டு வந்தவர்களுடனே பா.ம.க. தற்போது கூட்டணி வைத்துள்ளது. அ.தி.மு.க.வை பற்றி விமர்சனம் செய்வதற்கு பா.ம.வு.க்கு எந்த தகுதியும் இல்லை என்றார்.

விவிபேட் ஒப்புகை சீட்டு வழக்கு:

# தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவு

புதுடெல்லி, ஏப். 17-

விவிபேட் ஒப்புகை சீட்டு தொடர்பான வழக்கில் விரிவான விவரத்தை தாக்கல் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்திற்கு, சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர்கள் தங்களது வாக்கினை யாருக்கு செலுத்தினார்கள் என்பதை உறுதிபடுத்த மின்னணு வாக்கு இயந்திரத்துடன் விவிபேட இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது. ஒருவர் வாக்கை செலுத்தியதும், 7 வினாடிகளுக்கு விவிபேட் ஒப்புகை சீட்டில் வாக்காளர் பதிவான தங்கள் வாக்கை சரி பார்க்க முடியும். மின்னணு இயந்திரத்தில் பதிவான வாக்குகள் வாக்கு இயந்திரத்தில் எண்ணப்பட்டு விட்டதா என்பதை விவிபேட் இயந்திரம் மூலம் வாக்காளர் சரிபார்த்து உறுதிப்படுத்த தேர்தல் ஆணையம் மற்றும் மத்திய அரசுக்கு வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என ஜனநாயக சீர்த்திருத்த அமைப்பு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அதேபோல், தேர்வு செய்யப்பட்ட 5 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் உள்ள ஒப்புகை சீட்டுகளை மட்டும் மொத்த வாக்குகளுடன் ஒப்பிட்டு பார்ப்பதற்கு பதிலாக 100 சதவீத ஒப்புகை சீட்டுகளையும் பதிவான வாக்குகளுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டுமென சமூக ஆர்வலர் அருண் குமார் அகர்வால் என்பவரும் சுப்ரீம் கோர்ட்டில் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நேற்று சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. அதன்படி வழக்கு விசாரணையின்போது, ஒப்புகை சீட்டு இயந்திரத்தை கடந்த 2017-ம ஆண்டு இறுதி வடிவத்திற்கு கொண்டு வந்தபோது, அதில் வெளிப்படையாக தெரியும் கண்ணாடி பொருத்தப்பட்டிருந்தது. ஆனால் அதற்குப் பிறகு அதனை உள்ளிருந்து பல்பு எரிந்தால் மட்டுமே தெரியும் வகையிலான கண்ணாடியாக மாற்றி விட்டார்கள். தற்போது ஒப்புகைச்சீட்டு உள்ளே விழுகிறதா இல்லையா என்பது கூட வாக்காளர்களுக்கு தெரிவதில்லை என மனுதாரர் தரப்பு வாதிடப்பட்டது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் வாக்குச்சீட்டு முறைக்கே திரும்பி விட்டதாகவும் மனுதாரர் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது. அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், இந்தியாவுடைய வாக்காளா எண்ணிக்கை 1960களில் 50, 60 கோடி என்ற அளவில்தான் இருந்தது. ஆனால், தற்போது 97 கோடிக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் சராசரியாக 65 சதவீதம் பேர் வாக்களிக்கிறார்கள் என்றாலும் கூட அத்தனை வாக்குகளையும் எப்போது எண்ணி முடிப்பது என நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். அதற்கு பதில் அளித்த தேர்தல் ஆணையம், 97 கோடி பேரின் வாக்குகளை எண்ண 12 நாட்கள் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு தேர்தலை நடத்துவதற்கு ஆறு வாரத்திற்கு மேல் தேர்தல் ஆணையம் எடுத்துக் கொள்கிறது அப்படி இருக்கும்போது ஒப்புகைச்சீட்டு சரி பார்க்க சில மணி நேரங்கள் கூடுதலாக தேர்தல் ஆணையம் செலவிடுவதால் ஒன்றும் தவறாகி விடாது என மனுதாரர் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. முன்னதாக, நாடாளுமன்ற தேர்தலில் பதிவாகும் மொத்த வாக்குகளையும் எண்ணி முடிக்க 012 நாட்கள் ஆகும் என தேர்தல் ஆணையம் தனது பிரமாண பத்திரத்தில் சுப்ரீம் கோர்ட்டில் தெரிவித்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

இந்த வாதங்களை பதிவு செய்து கொண்ட சுப்ரீம் கோர்ட், வாக்குப்பதிவு இயந்திரத்தில் பதிவான வாக்குகளுடன் விவிபேட் ஒப்புகைச் சீட்டு இயந்திரத்துடன் 100 சதவீதம் சரிபார்க்கக் கோரிய மனுக்கள் மீதான விசாரணையை ஏப்ரல் 18-ம் தேதிக்கு தள்ளி வைத்தது. மேலும் மின்னணு வாக்குப்பதிவு முறையில் பின்பற்றப்படும் அனைத்து நடைமுறைகளையும் தெரிவிக்கும் வகையில் விரிவான விவரத்தை தாக்கல் செய்ய வேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்திற்கு சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் இன்று மாலை 6 மணியுடன் பிரசாரம் ஓய்கிறது:

# மீறி பிரசாரத்தில் ஈடுபட்டால் 2 ஆண்டுகள் சிறை-அபராதம்

## தேர்தல் ஆணையம் கடும் எச்சரிக்கை

சென்னை, ஏப். 17-

முதல் கட்டமாக பாராளுமன்ற தேர்தல் நடைபெறவுள்ள தமிழகம் மற்றும் புதுவையில் இன்று மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் ஓய்கிறது. மீறி பிரசாரத்தில் ஈடுபட்டால் 2 ஆண்டுகள் சிறை தண்டனை, அபராதம் விதிக்கப்படும் என்ற தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

### தீவிர பிரசாரத்தில்...

தமிழ்நாட்டில் பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் ஒரே கட்டமாக வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடைபெறுகிறது.

தமிழ்நாட்டில் தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, பா.ஜ.க. கூட்டணி, நாம் தமிழர் என 4 முனைப்போட்டி ஏற்பட்டுள்ளது. இன்னும் தேர்தலுக்கு சில நாட்களே உள்ள நிலையில் அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில், தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

### ஓரிரு நாள்களில்...

“தேர்தல் விதிமீறலில் ஈடுபடுபவர்கள் மீது சி-விஜில் எனும் செயலியில் புகார் அளிக்கலாம். அந்த செயலியில் இதுவரை 4,169 புகார்கள் வந்தன. அவற்றில் 3,350 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டன. 383 புகார்களுக்கு போதிய ஆதாரம் இல்லாததால் கைவிடப்பட்டன. மீதமுள்ள 34 புகார்கள் மட்டுமே தீர்க்கப்படாமல் உள்ளன.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 1-ம் தேதி முதல் பூத் ஸ்லிப் எனும் வாக்குச்சாவடி அடையாளச் சீட்டுகள் விநியோகம் செய்யப்பட்டன. தற்போது வரை 92.80 சதவீதம் அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சீட்டுகள் இன்னும் ஓரிரு நாள்களில் கொடுக்கப்படும்.

### மாற்றுத்திறனாளிகள்...

பார்வை மாற்றுத்திறனாளிகளும் தங்களது வாக்குகளைச் செலுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் வாக்கு செலுத்த ஏதுவாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பிரெய்லி வசதி உள்ளது. அதன்மூலம், அவர்கள் வாக்களிக்கலாம். தமிழ்நாடு முழுவதும் இன்று மாலை 6 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் நிறைவு பெறுகிறது. வாக்குப் பதிவு நிறைவடையும் தேதிக்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக பிரசாரம் முடிவடையும். பிரசாரம் ஓய்ந்த பிறகு யாரும் எந்த வகையிலும் வாக்கு சேகரிக்க கூடாது.

### விதிகளை மீறினால்...

பிரசாரம் நிறைவடைந்த பின், தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டம், ஊர்வலம் நடத்தக்கூடாது. தொலைக்காட்சி, ரேடியோ, சமூக வலைதளங்களில் தேர்தல் பிரசாரம் செய்யக் கூடாது. தேர்தல் விதிகளை மீறினால் 2 ஆண்டு சிறை, அபராதம் விதிக்கப்படும். வாக்காளர் அல்லாதவர்கள் இன்று மாலை 6 மணிக்குள் தொகுதியில் இருந்து வெளியேற வேண்டும். தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் உள்ளிட்ட இடங்களில் வெளியாட்கள் யாரும் தங்கக்கூடாது.

### ஆணையம் எச்சரிக்கை

தேர்தல் பிரசாரம் ஓய்ந்த பிறகு சமூக வலைதளங்களில் ஓட்டு சேகரித்தால் 2 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்படும் என தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது. வாட்ஸ்ஆப், பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் நாளை மாலை 6 மணி வரை மட்டுமே ஓட்டு சேகரிக்க அனுமதிக்கப்பட்ட நிலையில் அதற்கு மேல் பிரசாரத்தை பகிர்ந்தாலும், ஓட்டு சேகரித்தாலும் சிறை தண்டனை விதிக்கப்படும்

### அனைத்தும் தயார் நிலையில்

வாக்காளர்கள் ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால், 1950 என்ற

(கடைசி பக்கம் பார்க்க)

ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரித்து

# பரமக்குடியில் ரோடு ஷோ மூலம் வாக்கு சேகரித்தார் ஜே.பி.நட்டா

பரமக்குடி, ஏப். 17-

ஓ.பன்னீர்செல்வம் போன்றதொரு தலைவர் டெல்லிக்கு தேவைப்படுகிறார் என பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா பரமக்குடி பிரசாரத்தில் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு ஆதரவளித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ராமநாதபுரத்தில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கியுள்ளார். அவருக்கு பலாப்பழ சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஆதரவாக பாஜகவின் தேசிய தலைவர் ஜே.பி.நட்டா பரமக்குடியில் நேற்று (ஏப். 16) ரோடுஷோவில் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

ராமநாதபுரம் தொகுதியில் சுயேட்சையாக போட்டியிடும் ஓ.பன்னீர் செல்வத்திற்கு ஆதரவாக பரமக்குடியில் நடைபெற்ற ரோடுஷோ அவருடன் வேட்பாளர் ஓ.பன்னீர் செல்வமும், தேனி எம்பி ரவீந்திரநாத்தும் மற்றும் பாஜக தலைவர்கள் கலந்து கொண்டனர். கையில் பலாப்பழம் சின்னம் பொறித்த பதாகையை கையில் ஏந்தியபடி ஜே.பி. நட்டா திறந்த வாகனத்தில் நின்று கொண்டு மக்களிடம் வாக்கு சேகரித்தார்.

இந்த பேரணியின் போது ஜே.பி.நட்டா பேசியதாவது, “ஓ.பன்னீர்செல்வம் போன்றதொரு தலைவர் டெல்லிக்கு தேவைப்படுகிறார். இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக நாம் மாற்ற வேண்டும். அதை அடைய தேசிய ஜனநாயகக் கூட்டணி 400 இடங்களுக்கும் மேல் வெற்றி பெற வேண்டும். பிரதமர் மோடியின் எழுச்சிமிகு தலைமையின் கீழ், கிராமப்புறங்கள் புத்துயிர் பெற்றுள்ளன. தேசிய ஜனநாயகக் கூட்டணி பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும்” என்றார்.

பாராளுமன்ற தேர்தல்: பொதுமக்கள் ஊருக்கு செல்ல

# தமிழ்நாட்டில் 2 நாட்கள் சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, ஏப். 17-

பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு இன்றும், நாளையும் 2 நாட்களுக்கு தமிழகம் முழுவதும் கூடுதல் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

தமிழகத்தில் வெள்ளிக்கிழமை (ஏப்.19) நடைபெறும் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, புதன் மற்றும் வியாழக்கிழமைகளில்(ஏப்.17,18), சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், கூடுதலாக 2,970 சிறப்புப் பேருந்துகள் என இரண்டு நாள்களுக்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக, 7,154 பேருந்துகளும், பிற ஊர்களிலிருந்து இந்த இரண்டு நாள்களிலும் 3,060 சிறப்பு பேருந்துகள் என ஆக மொத்தம் 10,214 பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இந்த நிலையில், வியாழக்கிழமை(ஏப்.18) சென்னையிலிருந்து இயக்கப்படும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் பெரும்பான்மையான தடங்களில் முன்பதிவு முழுமையாக நிறைவடைந்துள்ளது. ஆனால், சென்னையிலிருந்து செவ்வாய்கிழமை(ஏப்.16) இயக்கப்படும் பேருந்துகளின் மொத்தமுள்ள 30,630 முன்பதிவு இருக்கைகளில், இதுவரை 1,022 மட்டுமே முன்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 29,608 இருக்கைகள் காலியாக உள்ளன.


இதுபோல புதன்கிழமை(ஏப்.17) இயக்கப்படும் பேருந்துகளின் மொத்தமுள்ள 31,308 முன்பதிவு இருக்கைகளில் 6,475 இருக்கைகள் மட்டுமே முன்பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 24,833 இருக்கைகள் காலியாக வுள்ளன. இதனால், தங்கள் சொந்த ஊர்களுக்கு பயணிக்க விரும்பும் பயணிகள், கடைசி நேர கூட்ட நெரிசலை தவிர்க்கும் வகையில், வியாழக்கிழமை தங்கள் பயணத்தை மேற்கொள்வதை விடுத்து, செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் முன்பதிவு செய்து பயணிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE -456.10 பாயின்ட் 72943.68

NSE -124.60 பாயின்ட் 22147.9



**தங்கம்** 1 சவரன் ₹54,960 1 கிராம் ₹6,870



**வெள்ளி** 1 கிலோ ₹90,500 1 கிராம் ₹90.50

**டாலர்** ₹83.67

**பெட்ரோல்** ₹101.57 **டீசல்** ₹93.18



# போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்களையும் நிராகரித்தது ஹமாஸ்

**காசா, ஏப் 17-**

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்களையும் ஹமாஸ் அமைப்பு நிராகரித்துள்ளதாக இஸ்ரேலின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது போர் தொடுத்துள்ள இஸ்ரேல், பணயக் கைதிகளை மீட்பதற்காக தொடர்ந்து பேச்சு வார்த்தையில் பங்கேற்கிறது. அவ்வகையில், போர் நிறுத்தம் செய்து கைதிகளை பரிமாற்றம் செய்வது தொடர்பாக புதிய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்த ஒப்பந்தத்தின் அனைத்து அம்சங்களையும் ஹமாஸ் அமைப்பு நிராகரித்துள்ளது. இது தொடர்பாக மூத்த இஸ்ரேல் அதிகாரி கூறிய தகவலை மேற்கோள் காட்டி டைம்ஸ் ஆப் இஸ்ரேல் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் அரசாங்கத்தால் விடுவிக்கப்பட வேண்டிய பாலஸ்தீன கைதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் இந்த ஒப்பந்தத்தில் இடம்பெற்றிருந்தன. ஆனால், ஹமாஸ் தரப்பில் ஒப்பந்தம் ஏற்கப்படவில்லை.

ஒப்பந்தத்தின்படி முதல் கட்டமாக, பெண்கள் மற்றும் 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் என சுமார் 20 பணயக் கைதிகளை மட்டுமே விடுவிக்க தயாராக இருப்பதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது. பணயக் கைதிகளை விடுவிக்கும் முன் ஆறு வார போர்நிறுத்தத்திற்கு இஸ்ரேல் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் ஹமாஸ் வலியுறுத்துகிறது.

இந்த ஒப்பந்தத்தை ஹமாஸ் தலைவர் சன்வார் விரும்பவில்லை. அமெரிக்காவின் முன்மொழிவுகளை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டது. அப்போதும்கூட, காசா மக்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதை சன்வார் பொருட்படுத்தவில்லை என இஸ்ரேல் அதிகாரி கூறியிருக்கிறார்.

இஸ்ரேல் மீது கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி ஹமாஸ் அமைப்பினர் மிகப்பெரிய அளவில் ராக்கெட் தாக்குதலை நடத்தியதுடன், இஸ்ரேலுக்குள் புகுந்தும் சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேல் ராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் என 1,200 பேர் கொல்லப்பட்டனர்.

240 பேரை ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளாக பிடித்து வந்தனர். இந்த தாக்குதல் மிகப்பெரிய போருக்கு வழிவகுத்தது. பழிக்குப்பழி தாக்குதல்களை தொடங்கிய இஸ்ரேல், காசாவை முழுவதுமாக முற்றுகையிடும்படி ராணுவத்திற்கு உத்தரவிட்டது. அதன்படி முதலில் வான்தாக்குதல் நடத்தப்பட்டது.

பின்னர், ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழிப்பது மற்றும் பணயக் கைதிகளை மீட்பது என்ற குறிக்கோளுடன் காசாவிற்குள் தரைவழி தாக்குதலை தொடங்கியது. காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 33,700 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிரிமினல் வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் டிரம்ப் ஆஜர்

**நியூயார்க், ஏப் 17-**

ஆபாச பட நடிகைக்கு ரூ. ஒரு கோடி பணம் வழங்கியதாக தொடரப்பட்ட வழக்கில் மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் ஆஜரானார்.

இந்த ஆண்டு இறுதியில் நடக்க உள்ள அமெரிக்க அதிபர் தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக டிரம்ப் மீண்டும் களமிறங்கியுள்ளார். கடந்த 2016-ம் ஆண்டு அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது ஆபாச பட நடிகை ஸ்டார்மி டேனியல் என்பவர் முன்னாள் அதிபர் டிரம்ப் மீது குற்றச்சாட்டுகளை தெரிவித்தார்.

இது பிரச்சாரத்தின் போது பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் தனது வழக்கறிஞர் மைக்கேல் கோஹன் மூலம் ஸ்டார்மி டேனியல்ஸ்க்கு ரூ. ஒரு கோடி பணம் வழங்கி அந்த விஷயத்தை மூடி மறைக்க முயற்சி செய்தார்.

நடிகைக்கு பணம் வழங்கியதை தேர்தல் செலவு கணக்கில் டிரம்ப் சேர்த்துள்ளார். இதனால் போலியாக செலவை காட்டியதாக டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டது. இது குறித்து, மன்ஹாட்டன் நீதிமன்றம் டிரம்ப் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்தது.

அமெரிக்க வரலாற்றில் முன்னாள் அதிபர் ஒருவர் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டது இதுவே முதல் முறையாகும். மன்ஹாட்டன் நீதிமன்ற நீதிபதிகள் பெரும்பாலும் ஜனநாயக கட்சிக்கு ஆதரவானவர்கள். எனவே வழக்கை வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்று டிரம்பின் வழக்கறிஞர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான வழக்கு இன்னும் சில வாரங்களில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருகிறது. இந்நிலையில், மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த வழக்கு விசாரணையில் டிரம்ப் நேரில் ஆஜரானார். வழக்கு விசாரணைக்காக தொடர்ந்து நீதிமன்றத்துக்கு வரவேண்டி உள்ளதால் வாரத்தில் 2 அல்லது 3 நாள்கள் மட்டுமே தேர்தல் பிரச்சாரத்தில் அவர் கலந்து கொள்ள முடியும்.

## திருப்பதியில் இன்று ராம நவமி ஆஸ்தானம்:

# நாளை பட்டாபிஷேக நிகழ்ச்சி நடைபெறுகிறது

**திருப்பதி, ஏப் 17-**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஸ்ரீராம நவமியை முன்னிட்டு இன்று சிறப்பு பூஜைகள் நடைபெற உள்ளன. கோவிலில் ரங்கநாயக மண்டபத்தில் சீதா, லட்சுமணர், அனுமன் சமேத ஸ்ரீ ராமருக்கு சிறப்பு திருமஞ்சன நிகழ்ச்சி நடக்கிறது.

மாலை 6.30 மணிக்கு அனுமன் வாகனத்தில் கோதண்ட ராமர் மாடவீதிகளில் பவனி வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். இரவு, கோவில் வளாகத்தில் ஜீயர்கள் முன்னிலையில் ஸ்ரீ ராம நவமி ஆஸ்தானம் நடைபெறுகிறது. இன்று மாலை சகஸ்ர தீப அலங்கார சேவை ரத்து செய்யப்பட்டுள்ளது. நாளை (18-ம் தேதி) இரவு 8 மணி முதல் 9 மணி வரை ஸ்ரீ ராமர் பட்டாபிஷேக நிகழ்ச்சி நடக்கிறது.

திருப்பதியில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 77 ஆயிரத்து 511 பக்தர்கள் சாமி தரிசனம் செய்துள்ளனர். 26 ஆயிரத்து 553 பேர் முடி காணிக்கை செலுத்தியுள்ளனர். உண்டியல் காணிக்கையாக ரூ.4.28 கோடி வசூல் ஆனது. பக்தர்கள் சுமார் 10 மணி நேரம் வரை காத்திருந்து தரிசனம் செய்தனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் விழாவில் கைம்பெண் செங்கோல் வாங்கக்கூடாது என்பதா?

## மனுவை தள்ளுபடி செய்து ஐகோர்ட் கிளை கண்டனம்

**மதுரை, ஏப் 17-**

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் விழாவில் கணவரை இழந்தவர் செங்கோல் வாங்க தடை கோரி வழக்கு தொடர்ந்தவருக்கு ஐகோர்ட் கிளை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

உலக புகழ்ப்பெற்ற மிகவும் பிரசித்திப்பெற்ற மதுரை சித்திரை திருவிழா கொடியேற்றத்துடன் துவங்கி நடைபெறவுள்ளது. சித்திரை திருவிழாவின் முத்திரை பதிக்கக்கூடிய நிகழ்ச்சி என்பது மீனாட்சியம்மனுக்கு பட்டாபிஷேகம் செய்யப்பட்டு செங்கோல் வழங்கப்படும். அதனை தொடர்ந்து திருக்கல்யாணம், தேரோட்டம், அழகர் ஆற்றில் இறங்கக்கூடிய வைபவங்கள் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சியின் போது மீனாட்சி அம்மனுக்கு செங்கோல் வழங்கப்படும். இந்த கோவிலில் தற்போது அறங்காவலர் குழு தலைவராக ருக்மணி பழனிவேல் தியாகராஜன் இருந்து வருகிறார். அவர் கணவரை இழந்தவர் என்பதால் அவர் செங்கோல் வாங்கக்கூடாது என உத்தரவிடக்கோரி ஐகோர்ட் மதுரை கிளையில் தினகரன் என்பவர் ஒரு மனுவினை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று நீதிபதி சரவணன் முன்பாக விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது அரசு தரப்பில் கூடுதல் தலைமை வழக்கறிஞர் வீரா கதிரவன் ஆஜராகி, இதே கோரிக்கையுடன் ஏற்கனவே மனு ஒன்று இரண்டு நீதிபதிகள் அமர்வில் தாக்கல் செய்யப்பட்டது. அப்போது இந்த மனுவை விசாரணை செய்து இந்த மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என கூறி மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மேலும் இதுபோன்ற மனுக்கள் மன வருத்தத்தை தருகிறது என வாதிட்டார்.

இதனை தொடர்ந்து நீதிபதி சரவணன் மனுதாரர் தரப்புக்கு பல்வேறு கேள்விகளை எழுப்பியிருந்தார். குறிப்பாக மதுரை மீனாட்சி அம்மன் கோவில் விழாவில் திருமணம் ஆகாதவர்கள், வாழ்க்கைத் துணை இழந்தவர்கள் செங்கோலை வாங்கக்கூடாது என ஆகம விதிகளில் எங்கு உள்ளது? என கேள்வி எழுப்பினார். அது மட்டுமின்றி கோவிலுக்குள் இந்துக்கள் அனைவரும் தானே செல்கிறார்கள்? செங்கோல் வாங்குபவரும் இந்து தானே..அதில் தங்களுக்கு என்ன பிரச்சனை உள்ளது என கேள்வி எழுப்பிய நீதிபதி, நவீன காலத்திலும் இது போன்ற கருத்துக்களை முன் வைப்பது ஏற்கத்தக்கதல்ல. பிற்போக்குத்தனமான கோரிக்கையுடன் வழக்கு தொடர்வதா? என மனுதாரருக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

கோவில் திருவிழா ஆரம்பித்த பின் கடைசி நேரத்தில் இதுபோன்ற மனு தாக்கல் செய்வது ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவித்த நீதிபதி தொடர்ந்து அறங்காவலர் குழு தலைவர், செயல் அலுவலரிடம் செங்கோல் வழங்குவதை எதிர்த்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

## அணுமின் நிலையங்களை குறிவைக்க வாய்ப்பு:

# இஸ்ரேல் - ஈரான் இடையே போர் பதற்றம்: ஐ.நா. கவலை

**நியூயார்க், ஏப். 17-**

டமாஸ்கசில் உள்ள ஈரான் துணை தூதரகம் தாக்கப்பட்டதற்கு பதிலடியாக கடந்த சனிக்கிழமை இஸ்ரேல் மீது ஈரான் நேரடியாக தாக்குதல் நடத்தியது. 300-க்கும் மேற்பட்ட டிரோன்கள் மற்றும் ஏவுகணைகளை செலுத்தியது. இந்த ஆயுதங்களில் கிட்டத்தட்ட அனைத்தையும் இடைமறித்து அழித்துவிட்டதாக இஸ்ரேல் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இஸ்ரேலின் 2 விமான தளங்களை ஈரான் ஏவுகணைகள் தாக்கியுள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது.

ஈரான் தரப்பில் இருந்து முதல் முறையாக இஸ்ரேல் மீது நேரடி தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதால், இஸ்ரேல் கடும் ஆத்திரமடைந்துள்ளது. ஈரானின் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளது. ஈரானுக்கு எவ்வாறு பதிலடி கொடுப்பது? என்பது குறித்து தீவிரமாக பரிசீலித்து வருகிறது. இது மோதலை அதிகரிக்கச் செய்யும் என்பதால், தாக்குதல் எண்ணத்தை கைவிடும்படி இஸ்ரேலை நட்பு நாடுகள் வலியுறுத்துகின்றன.

ஒருவேளை இஸ்ரேல் முழு அளவிலான தாக்குதலை முன்னெடுத்தால் ஈரான் நாட்டின் அணுமின் நிலையங்களை குறிவைக்கலாம் என கூறப்படுகிறது. ஈரானின் அணுமின் நிலையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதற்கு சாத்தியம் இருப்பதாகவும், இதுகுறித்து கவலைப்படுவதாகவும் ஐ.நா. சபையின் அணுசக்தி கண்காணிப்பு அமைப்பின் தலைவர் ரபேல் குரோஷி கூறி உள்ளார்.

இதுஒருபுறமிருக்க, இஸ்ரேல் செய்த தவறுக்கு பதிலடியாக தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இத்துடன் அந்த பிரச்சினை முடிந்துவிட்டதாகவும் ஈரான் கூறி உள்ளது. இஸ்ரேல் அரசு மற்றொரு தவறை செய்தால், ஈரானின் பதிலடி கடுமையாக இருக்கும் என்றும் எச்சரித்துள்ளது. எனவே, இனி இஸ்ரேலின் அடுத்தகட்ட நகர்வைப் பொருத்து இரு நாடுகளுக்கிடையே நேரடி போர் மூளுமா? அல்லது பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுமா? என்பது தெரியவரும்.

# சிவில் சர்வீஸ் தேர்வு முடிவுகள் வெளியீடு

## முதல் 3 இடங்களில் ஆண்கள்

**புதுடெல்லி, ஏப் 17-**

மத்திய அரசில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் உள்ளிட்ட குடிமைப் பணிகளில் பணியாற்றும் நபர்களைத் தேர்வு செய்ய மத்திய பணியாளர் ஆணையம் யு.பி.எஸ்.சி. தேர்வுகளை நடத்தும்.

அதன்படி கடந்தாண்டு குரூப் ஏ மற்றும் குரூப் பி பணியிடங்களுக்கான தேர்வை யு.பி.எஸ்.சி நிர்வாகம் நடத்தியது. இதில் குடிமைப் பணிகளுக்கு மொத்தம் மூன்று வகையான தேர்வுகள் நடத்தப்படும். அதில் தேர்வானவர்களுக்கு மார்க் அடிப்படையில் பணிகள் ஒதுக்கப்படும்.

கடந்த மே 28-ம் தேதி முதல்நிலை தேர்வுகள் நடத்தப்பட்ட நிலையில், அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்குக் கடந்தாண்டு செப் 15-ல் தொடங்கி 5 நாட்கள் முதன்மை தேர்வு நடத்தப்பட்டது. தொடர்ந்து அதில் தேர்வானவர்களுக்குக் கடந்த ஜனவரி 4 முதல் 9 வரை நேர்காணல் நடத்தப்பட்டது.

இந்த யு.பி.எஸ்.சி. தேர்வுக்கான முடிவுகள் நேற்று வெளியாகி இருக்கிறது. இதில் மொத்தம் 1016 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில் 664 பேர் ஆண்கள் மற்றும் 352 பெண்கள் ஆவர். அவர்கள் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், இந்திய வெளியுறவுப் பணி, மத்தியப் பணிகள் குரூப் ஏ மற்றும் குரூப் பி ஆகிய பணிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

தேர்வானவர்களில் மொத்தம் 347 பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்த பட்டியலில் 116 பேர் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கும் நிலையில் ஓ.பி.சி. பிரிவில் இருந்து 303 பேரும், எஸ்.சி. பிரிவில் இருந்து 165 பேரும், எஸ்.டி. பிரிவில் இருந்து 86 தேர்வாகியுள்ளனர். இதில் ஆதித்ய ஸ்ரீவஸ்தவா என்பவர் முதல் இடத்தை பிடித்துள்ளார். அனிமேஷ் பிரதான் 2-வது இடத்தை பிடித்துள்ள நிலையில், டோனூரு அனன்யா ரெட்டி 3-வது இடத்தையும், பி.கே. சித்தார்த் ராம்குமார் 4-வது இடத்தையும் பிடித்துள்ளார். மேலும் ருஹானி என்பவர் 5-வது இடத்தை பிடித்துள்ளார். இது தவிர சிருஷ்டி தபஸ், அன்மோல் ரத்தோர், ஆஷிஷ் குமார், நௌஷீன், ஐஸ்வர்யம் பிரஜாபதி ஆகியோர் 6 முதல் 10 இடங்களை பிடித்துள்ளனர். இந்த தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களை பல்வேறு துறைகளில் பணியில் அமர்த்த யு.பி.எஸ்.சி. பரிந்துரை செய்துள்ளது. சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில்,

2023-ம் ஆண்டு சிவில் சர்வீசஸ் தேர்வில் வெற்றி பெற்ற அனைவரையும் நான் வாழ்த்துகிறேன். அவர்களின் கடின உழைப்பு, விடாமுயற்சி, அர்ப்பணிப்புக்கு கிடைத்த பலன் இது. அவர்களின் முயற்சிகள் எதிர்காலத்தில் நமது தேசத்தின் எதிர்காலத்தை கட்டமைக்கும். அவர்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் எனப் பதிவிட்டுள்ளார். அதே போல், தேர்வில் தோல்வியுற்றவர்களுக்கும் உத்வேக வார்த்தைகளை பிரதமர் கூறியுள்ளார். தோல்வி பயணத்தின் முடிவு அல்ல. தேர்வுகளையும் தாண்டி பிரகாசிக்கக் கூடிய உங்கள் திறமைகளுக்கான வாய்ப்புகள் இந்தியாவில் ஏராளமாக உள்ளன என்று பிரதமர் மோடி உற்சாகப்படுத்தியுள்ளார்.

## தலைவர்களின் செல்போன் ஒட்டுக்கேட்பு:

# தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரியிடம் தி.மு.க. புகார்

**சென்னை, ஏப். 17-**

தி.மு.க. தலைவர்களின் செல்போன்களை அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் சிபிஐ ஒட்டுக்கேட்பதாக தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்துள்ளார்.

தமிழ்நாட்டில் பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் ஒரே கட்டமாக வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடைபெறுகிறது. இன்றே பிரசாரத்திற்கு கடைசி நாள் என்பதால் அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், தேர்தல் களம் சூடுபிடித்துள்ளது.

இந்நிலையில் தி.மு.க. தலைவர்கள், வேட்பாளர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள், அவர்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் செல்போன்களை அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் மத்திய புலனாய்வு அமைப்புகள் ஒட்டுக் கேட்பதாக தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் அளித்துள்ளார்.

## முன்னாள் அமைச்சர் இந்திரகுமாரி மறைவு:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

**சென்னை, ஏப். 17-**

முன்னாள் அமைச்சரும், தி.மு.க. இலக்கிய அணித் தலைவருமான இந்திரகுமாரி காலமானார். அவரது மறைவிற்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கடந்த 1991 முதல் 1996 வரையிலான மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அதிமுக அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராக இந்திரகுமாரி பணியாற்றினார். இந்திரகுமாரி 2006-ம் ஆண்டு திமுகவில் இணைந்தார். திமுகவில் இணைந்த இவருக்கு இலக்கிய அணியில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. இவர் தொட்டில் குழந்தை திட்டம் உருவாக முக்கிய காரணமாக விளங்கினார்.

கடந்த சில நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்த இந்திரகுமாரி நேற்று முன்தினம் (ஏப்.15) இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவருக்கு வயது 73. அவரது மறைவுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் மற்றும் திமுக நிர்வாகிகள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் சார்பில் வெளியிடப்பட்ட இரங்கல் செய்திக் குறிப்பில்,

"திமுக இலக்கிய அணித் தலைவர் புலவர் இந்திரகுமாரி மறைந்த துயரச் செய்தி வந்து சோகத்தில் ஆழ்த்தியது. நெடிய அரசியல் அனுபவம் கொண்டவரான புலவர் இந்திரகுமாரி தமிழக அமைச்சரவையில் இடம் பெற்று மக்களுக்குப் பணியாற்றியவர். தீராத் தமிழ்ப் பற்றுடன் இலக்கிய வெளியில் இயங்கியவர். அவரது மறைவு திமுகவிற்கும், இலக்கிய உலகிற்கும் பேரிழப்பாகும். புலவர் இந்திரகுமாரியை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள், திமுக உடன்பிறப்புகள் என அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

# சிங்கம்-சிறுத்தை இடையே மாட்டிக் கொண்ட ஆட்டுக்குட்டியாக அண்ணாமலை இருக்கிறார்

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ தாக்கு

**மதுரை, ஏப். 17-**



ஒரு பக்கம் சிங்கம் ஒரு பக்கம் சிறுத்தை இதற்கு இடையே மாட்டிக் கொண்ட ஆட்டுக்குட்டியாக அண்ணாமலை இருக்கிறார் என்று முன்னாள் அமைச்சரும், எம்.எல்.ஏ.வுமான செல்லூர் கே ராஜூ விமர்சித்துள்ளார்.

மதுரை பாராளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் டாக்டர் சரவணனுக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வரக்கூடிய நிலையில் நேற்று மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானம் பகுதியில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பின்னர் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-மதுரை நாடாளுமன்றத் தேர்தலில் இறுதி கட்ட பிரச்சாரம் தற்போது நிலவி கொண்டிருக்கிறது. நாளை (இன்று) மாலை 6 மணியோடு இந்த பிரச்சாரம் முடிவடைகிறது. இந்த நாடாளுமன்ற தேர்தலில் ஒரு வித்தியாசமாக மக்களுடைய ஒட்டுமொத்த நம்பிக்கையை பெற்ற கூட்டணியாக அதிமுக தலைமையிலான கூட்டணி இருக்கிறது என்பதில் மாற்று கருத்து எதுவும் இல்லை நாங்கள் வாக்காளரை சந்திக்கும் போது எங்கள் தலைமையிலான கூட்டணி கட்சியான தேசிய முற்போக்கு திராவிடர் கழகம், கேப்டன் அவர்களுடைய கட்சியும் அதே போல அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் எங்களுக்கு பெரிய வரமாக கிடைத்த சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆப் இந்தியா மற்றும் புதிய தமிழகம் மருது சேனை மற்றும் 11 அமைப்புகள் இன்றைக்கு எங்களுடைய கூட்டணியை ஆதரித்து உள்ளார்கள்.

குறிப்பாக மதுரை பொருத்தமட்டில் ஒரு மிகப் பெரிய அரசியல் களம். இந்த களம் தமிழ்நாட்டில் எதிரொலிக்கும் என்பது ஒரு வரலாற்று உண்மை.எதுவாக இருந்தாலும் குறிப்பாக சினிமா நாடகம் அரசியல் என மதுரை மண் ஒரு செண்டிமெண்டாக இருக்கக்கூடிய ஒரு தளம். எனவே இந்த தேர்தலில் நாங்கள் பார்த்தது முதல் தொடக்கமே மிக அற்புதமாக அமைந்தது.மக்கள் எல்லோருமே மனமுவந்து அதிமுக ஆட்சி வரவேண்டும் அவர்கள் மக்களுக்கு நல்லது செய்த ஆட்சி தான் அதிமுக என்று என்ன தொடங்கி விட்டார்கள்.இந்த மூன்று ஆண்டுகளில் அவர்கள் பட்ட வேதனைகளை அவர்கள் புரிந்து இருக்கிறார்கள்.

நமது வேட்பாளருடைய பண்பு அனைவருக்கும் தெரியும். இவர் பல்வேறு தன்னார்வத் தொண்டுகள் செய்து வருகிறார். மதுரையில் ஏராளமான பொதுமக்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கு கை கால் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கி இருக்கிறார்.மருத்துவ சேவை செய்து வருகிறார் அவருக்கு தான் வாக்களிக்க வேண்டும் என்று மக்கள் பேசி வருகிறார்கள். எங்களை எதிர்த்து நிற்கக் கூடிய வேட்பாளர் மிகவும்வீக்கான ஒரு வேட்பாளராக உள்ளார். எங்களை எதிர்த்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தரப்பில் நிறுத்தப்பட்டுள்ளார் தற்பொழுது அவர் திமுக தொண்டர்களை கூட குறிப்பாக அவரை உயர்த்துவிட்ட நாடாளுமன்ற தற்போது அவரிடத்தில் சரக்கு இல்லை செட்டியார் முறுக்கும் இல்லை.கூட்டணியில் வலுவில்லை மக்கள் அவரை புறக்கணிக்கிறார்கள்.

சரக்கும் சூப்பர் சரக்கு எங்களது வேட்பாளர் மருத்துவர் சூப்பர் சரக்கு எங்களது புரட்சித்தமிழரும் முருக்கானவர்.ஒரு இரண்டு ஆளுங் கட்சியை எதிர்த்து களத்தில் நிற்கின்றார்.இவருக்கு பாரதிய ஜனதா ராம சீனிவாசன் அவர்கள் பேசி வருகிறார். தமிழகத்தில் நன்றாக மாட்டிக்கொண்ட ஆடாக (அண்ணாமலை )இருக்கிறார்.ஒரு பக்கம் சிங்கம் ஒரு பக்கம் சிறுத்தை இந்த சிறுத்தைக்கும் சிங்கக்கும் இடையே மாட்டிக் கொண்ட ஆட்டுக்குட்டியாக அவர் இருக்கிறார். என்ன பேசுகின்றோம் என்பது தெரியாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறார்.எனவே இதில் வெற்றி பெறப்போவது மக்களுடைய நம்பிக்கையை பெற்ற மக்களுடைய அபரிதமான ஆதரவை பெற்று இருக்கின்ற எங்களுடைய டாக்டர் சரவணன் இரட்டை இலை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்கே எங்களிடம் எப்படி இருந்தவர் எப்படி இருந்த மனுஷன் இன்றைக்கு பலாப்பழத்தை தூக்கிக்கொண்டு அவர் நிற்கக்கூடிய காட்சியை பாருங்கள் பலாப்பழம் பழுக்காது அழுகித்தான் போகும்.உண்மையிலேயே மனசாட்சி இல்லாமல்ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக தன்மானம் ரோஷம் எல்லாத்தையும் விட்டுவிட்டு ஓபிஎஸ் போய் ?. ஓபிஎஸ் - அவரை உலகத்துக்கு தெரிகின்றது என்றால் நாட்டுக்கு தெரிகின்றது என்றால் ஊடகங்களை மூன்று முறை முதலமைச்சராக இருந்தவர் என்று செய்தி வரக்கூடிய வழியில் அதற்கு காரணம் யார் அந்த தலைமையை கொச்சைப்படுத்திய அண்ணாமலையுடன் நின்று கைகூப்பி வாக்கு சேகரித்து வருகிறார்.சே என்று ஏளனமாக பேசி முடித்தார். இவ்வாறு அவர் கூறினார்.

## பழம்பெரும் மலையாள பட

# இசையமைப்பாளர் ஜெயன் காலமானார்

**திருவனந்தபுரம், ஏப் 17-**



பழம்பெரும் மலையாள சினிமா இசையமைப்பாளரும், பாடகரும், நடிகர் மனோஜ் கே.ஜெயனின் தந்தையுமான கே.ஜி.ஜெயன் (90) நேற்று காலமானார். கடந்த 1968-ல் பூமியிலே மாலாகமார் என்ற படத்தின் மூலம் மலையாள சினிமாவில் இசையமைப்பாளராக அறிமுகமானவர் கே.ஜி. ஜெயன். 20 படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

தனது தம்பி விஜயனுடன் இணைந்து பின்னர் மலையாள பக்தி பாடல்களை பாட தொடங்கினார். சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடை திறக்கும் போது ஒலிபரப்பாகும் கோயில் நடை துறன்னு என்ற பாடலை இவரும், இவரது தம்பி விஜயனும் சேர்ந்து தான் இசையமைத்து பாடினர். 2 பேரும் சேர்ந்து ஏராளமான பக்தி இசை ஆல்பங்களையும் வெளியிட்டுள்ளனர்.

அண்ணனும், தம்பியும் சேர்ந்துதான் ஒரு காலத்தில் கேரளாவில் பெரும்பாலான கோவில் விழாக்களில் பாடி வந்தனர். இவர்கள் இருவரும் கேரளாவில் ஜெய விஜய சகோதரர்கள் என்று அழைக்கப்பட்டு வந்தனர். வயது மூப்பு காரணமாக கொச்சி திருப்பூணித்துறையில் உள்ள வீட்டில் கே.ஜி. ஜெயன் நேற்று அதிகாலை காலமானார். அவரது மறைவுக்கு கேரள கவர்னர் ஆரிப் முகம்மது கான், முதல்வர் பினராய் விஜயன் உள்பட பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர். 2019-ம் ஆண்டு பத்மஸ்ரீ விருதும், 1991-ல் சங்கீத நாடக அகாடமி விருதும், 2013-ல் ஹரிவராசனம் விருதும் அவருக்கு கிடைத்தது. இவருக்கு மலையாளத்தில் முன்னணி நடிகர்களில் ஒருவரான மனோஜ் கே.ஜெயன் மற்றும் பிஜு கே.ஜெயன் ஆகிய 2 மகன்கள் உள்ளனர்.

# பாராளுமன்ற தேர்தல்களம் 2024

## இண்டியா கூட்டணிக்கு தொலைநோக்கு பார்வை இல்லை: பிரதமர் மோடி தாக்கு

**பாட்னா, ஏப் 17-**

இண்டியா அணிக்கு தொலைநோக்குப் பார்வையோ, நம்பிக்கையோ இல்லை. அவர்களிடம் எந்த சாதனையும் இல்லை என்று பிரதமர் மோடி விமர்சித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு பீகாரின் கயா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது,

பா.ஜ.க.வின் உறுதிமொழிப் பத்திரம் (தேர்தல் அறிக்கை) இரண்டு நாட்களுக்கு முன்பு வெளியிடப்பட்டது. சில கட்சிகள் தங்கள் தேர்தல் அறிக்கையை கேரண்டி கார்டு என அழைப்பது இதுவே முதல் முறை.

நமது அரசியலமைப்புச் சட்டம் தூய்மையானது. அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் வளமான இந்தியாவை உருவாக்க கனவு கண்டனர். ஆனால், நாட்டில் பல தசாப்தங்களாக ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சி, வளமான இந்தியாவை உருவாக்குவதற்கான வாய்ப்பை தவற விட்டது.

பா.ஜ.க. தலைமையிலான அரசு எந்த ஒரு வாய்ப்பையும் தவற விடவில்லை. அதன் காரணமாகத்தான், நாட்டில் 25 கோடி ஏழைகள் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். மோடியின் உத்தரவாத அட்டை(கேரண்டி கார்டு) அடுத்த 5 ஆண்டுகளுக்கு புதுப்பிக்கப்பட்டுள்ளது.

ஏழைகளுக்கு மூன்று கோடி வீடுகள் கட்டித் தரப்படும். ஏழைகளுக்கு அடுத்த ஐந்தாண்டுகளுக்கு இலவச ரேசன் வழங்கப்படும். 70 வயது நிரம்பியவர்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை அளிக்கப்படும், விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ. 6,000 வழங்கும் பிரதமர்-கிசான் சம்மான் நிதி தொடரும். இவை அனைத்தும் மோடியின் கேரண்டிகள்.

பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும், ஒவ்வொரு துறைக்கும் ஒரு திட்ட வரைபடம் உள்ளது. இளைஞர்கள் வேலை தேடி வெளியே செல்ல வேண்டியதில்லை. கடந்த 10 ஆண்டுகளில் ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது.

நாட்டில் 10 கோடி பெண்கள் சுயஉதவி குழுக்களுடன் இணைந்துள்ளனர். பீகாரில் 1.15 கோடி பெண்களும், கயாவைச் சேர்ந்த 5.15 லட்சம் பெண்களும் சுயஉதவி குழுக்களுடன் இணைந்துள்ளனர். மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு இருந்த போது, பீகார் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.150 கோடிக்கும் குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டது.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த 10 ஆண்டுகளில் இந்தக் குழுக்களுக்கு ரூ.40,000 கோடிக்கு மேல் நிதி வழங்கியுள்ளது. வளர்ச்சி மற்றும் பாரம்பரியம் எங்கள் நிகழ்ச்சி நிரலில் உள்ளன. இண்டியா அணிக்கு தொலைநோக்குப் பார்வையோ, நம்பிக்கையோ இல்லை. அவர்களிடம் எந்த சாதனையும் இல்லை. பீகார் முதல்வர் நிதிஷ் குமார் செய்த பணிகளை சொல்லித்தான் அவர்கள் வாக்கு கேட்கிறார்கள்.

நிதிஷ் குமாரும், மத்திய அரசும் செய்த மக்கள் நலத் திட்டங்களுக்கு இண்டியா அணியினர் ஏன் உரிமை கோருகிறார்கள் என்பது ஒட்டுமொத்த பீகாருக்கும் தெரியும். பீகாரில் பல ஆண்டுகளாக ஆர்.ஜே.டி ஆட்சி செய்துள்ளது. ஆனால் அவர்களின் அரசு செய்த பணிகளை விவாதிக்க அவர்களுக்கு தைரியம் இல்லை. பீகாரில் காட்டாட்சியின் மிகப்பெரிய முகமாக ஆர்.ஜே.டி உள்ளது. இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்தார்.

## என்னை மிகவும் கவர்ந்த மாநிலம் தமிழகம்

### கிருஷ்ணகிரியில் ராஜ்நாத்சிங் பேச்சு

**கிருஷ்ணகிரி, ஏப் 17-**

தமிழ்நாடு என்னை மிகவும் கவர்ந்த மாநிலம். இந்தியாவில் உள்ள மொழிகளுக்கு மூத்த மொழி தமிழ் என மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் நரசிம்மனை ஆதரித்து மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பிரச்சாரம் மேற்கொண்டார். தமிழில் வணக்கம் கூறி அமைச்சர் ராஜ்நாத் சிங் உரையை தொடங்கினார். அப்போது பேசிய அவர்,

பாராளுமன்ற கட்டிடத்தில் செங்கோல் நிறுவப்பட்டுள்ளது. தமிழ் கலாச்சாரத்தின் அடையாளமான செங்கோலை பாராளுமன்றத்தில் நிறுவி பெருமைப்படுத்தியவர் பிரதமர் மோடி. பிரதமரின் செயல்பாட்டுக்கு பின்னர் தமிழ்நாடு என்று பேசும் போது முதலில் நம் நினைவுக்கு வருவது செங்கோல் தான்.

பிரதமர் மோடி தமிழ் கலாச்சாரத்திற்கு முழு மதிப்பளிக்கிறார். உலகம் முழுவதும் தமிழ் கலாச்சாரம் பிரதமரால் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு என்னை மிகவும் கவர்ந்த மாநிலம். இந்தியாவில் உள்ள மொழிகளுக்கு மூத்த மொழி தமிழ்.

பாதுகாப்பு தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் முதல் 25 நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. உலகில் 5ஜி சேவை பயன்பாட்டில் இருக்கும் போது இந்தியாவில் மோடி 6ஜி சேவை வழங்க முயற்சி செய்து வருகிறார். நாட்டில் ராணுவ கப்பல் கட்டும் அளவிற்கு இந்தியா உயர்ந்து உள்ளது. டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை மூலம் ஊழல் தடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ராஜ்நாத்சிங் தெரிவித்தார்.

## 3-ம் உலகப் போரை தடுக்க மோடியால் மட்டுமே முடியும்

### பல்லடத்தில் அண்ணாமலை பேட்டி

**பல்லடம், ஏப் 17-**

மூன்றாம் உலக போர் சூழலை தவிர்க்க முடியும் என்றால் அது மோடியால் மட்டுமே முடியும் என்று பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அய்யம்பாளையம் பகுதியில் 1972-ம் ஆண்டு மின்சார கட்டண உயர்வு போராட்டத்தால் உயிர் நீத்த விவசாயிகள் நினைவிடத்தில் கோவை பாராளுமன்ற தொகுதி வேட்பாளரும், பா.ஜ.க. மாநில தலைவருமான அண்ணாமலை நேற்று அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

அய்யம்பாளையத்தில் மிக முக்கியமான ஒரு சின்னம் உள்ளது. அதை அனைவரும் மறந்து விட்டனர். அதை நினைவு படுத்துவது நமது கடமை. இங்கு நினைவஞ்சலி செலுத்துவதற்கான காரணம் நமது உரிமையை நாமே ஜனநாயகத்தில் பெற்றெடுக்க வேண்டும்.

தியாகி கப்பையன் மகன் ராஜேந்திரன் மற்றும் அவரது மருமகள் கவிதா ஆகியோர் எங்களுடன் இருக்கின்றனர். தியாகிகளின் நினைவிடத்தில் இருந்து இன்றைய பிரசாரத்தை தொடங்குகிறோம்.

கடந்த ஆண்டு பல்லடம் அருகே கள்ளக்கிணறு கிராமத்தில் தங்களது தோட்டத்தில் அமர்ந்து மது அருந்திய நபர்களை தட்டிக்கேட்ட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4பேர் வெட்டி கொல்லப்பட்ட வழக்கின் தீர்ப்பு வந்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் கல்விச் செலவை பா.ஜ.க. ஏற்றுக் கொண்டது.

நேற்று முன்தினம் நீதிமன்றம் 5 குற்றவாளிகளுக்கும் தீர்ப்பு வழங்கியுள்ளது. 4 பேருக்கு ஆயுள் தண்டனையும் ஒரு நபருக்கு 6 ஆண்டு ஆயுள் தண்டனையும் வழங்கியுள்ளது. நீதிமன்ற தீர்ப்பு ஒரு விதத்தில் எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

அந்த குடும்பத்தினரின் குழந்தைகள் பா.ஜ.க.வின் பாதுகாப்பில் உள்ளனர். காவல்துறையினர் மிக வேகமாக செயல்பட்டு இந்த வழக்கை முடித்துள்ளனர். இந்த தீர்ப்பு ஒரு விதத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆறுதல் அளிக்கிறது.

ரஷ்யா -உக்ரைன் போர் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதற்கு முன்பு சிரியாவில் நடந்த தாக்குதலில் ஈரான் அதிகாரிகள் இறந்தார்கள். ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் நேரடி போர் சூழல் தொடங்கியுள்ளது. இந்த போர் நேரத்தில் தான் இந்தியாவின் தலைமை இன்னும் வலிமையாக இருக்க வேண்டும்.

நாட்டை பாதுகாக்க, இறையாண்மையை பாதுகாக்க 2024-ல் பிரதமர் மோடியின் தலைமை மிக அவசியமாக உள்ளது. காரணம் கடினமான ஒரு சூழ்நிலைக்குள் உலகம் சென்று கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் போர்சூழல் நிலவினாலும் மோடி பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை மக்களுக்கு உள்ளது.

இப்படிப்பட்ட கடினமான சூழலிலும் 10 ஆண்டுகளில் இந்தியாவை முன்னேறிய நாடாக மோடி உயர்த்தியுள்ளார். மூன்றாம் உலக போர் சூழலை தவிர்க்க முடியும் என்றால் அது மோடி அவர்களால் மட்டுமே முடியும். அனைத்து உலக தலைவர்களிடமும் பேச முடியும் என்றால் அது மோடியால் மட்டுமே முடியும்.

2029-ல் மோடி உலகத்தினுடைய தலைவராக உருவெடுப்பார். உலகத்தின் முன்னணி நாடாக இந்தியா இருக்கும். பெட்ரோல் விலையை ஜி.எஸ்.டி.க்குள் கொண்டுவர நாங்கள் எப்போதோ அறிவித்து விட்டோம். ஆனால் மாநில அரசுகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

மாநில அரசுக்கு வரும் வருமானம் காணாமல் போகும் என்பதால் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். கடந்த2 ஆண்டுகளில் 15 ரூபாய் முதல் 18 ரூபாய் வரை பெட்ரோல், டீசல் விலையை குறைத்துள்ளோம். கியாஸ் சிலிண்டருக்கு 300 ரூபாய் மானியம் அளித்துள்ளோம்.

இந்தியாவைப் பொறுத்தவரை வாக்குச்சீட்டில் இருந்து வாக்குப்பதிவு எந்திரத்திற்கு நாம் மாறிவிட்டோம். 2024-ம் ஆண்டு தோல்விக்கு பிறகும் இண்டியா கூட்டணி இது போன்ற காரணங்களை சொல்லிக் கொண்டே தான் இருப்பார்கள். ஒட்டுச்சீட்டு முறை இருந்தபோது கிராம பகுதியில் என்னென்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். கள்ள ஓட்டு தடுக்கப்பட்டுள்ளது. இந்தியா தொழில்நுட்பத்தில் வேற லெவலில் உள்ளது. தேர்தல் நடத்தும் முறையில் இந்தியா அனைத்து நாடுகளுக்கும் முன்னோடியாக உள்ளது. எனவே அமெரிக்காவைப் பார்த்து இந்தியா காப்பி அடிக்க வேண்டாம். இந்தியாவைப் பார்த்துதான் அமெரிக்கா காப்பியடித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## வயநாடு தொகுதியில் 2-வது நாளாக ராகுல் காந்தி நடத்திய ரோடு ஷோ

**வயநாடு, ஏப் 17-**

வயநாடு தொகுதியில் இரண்டாவது நாளாக நேற்று ராகுல் காந்தி ரோடு ஷோ நடத்தினார்.

பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் முதற்கட்டமாக வரும் 19-ம் தேதி தொடங்கி ஜூன் 1-ம் தேதி வரை நாடு முழுவதும் ஏழு கட்டங்களாக நடைபெறவுள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடைபெற்று, அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இந்த நிலையில், ராகுல் காந்தி, தான் போட்டியிடும் கேரள மாநிலம் வயநாடு தொகுதிக்கு நேற்று முன்தினம் சென்றார். அங்கு அவர் சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு ரோட் ஷோ நடத்தினார். அப்போது வழிநெடுகிலும் திரண்டிருந்த பொதுமக்கள் ராகுல் காந்திக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்த நிலையில், இரண்டாவது நாளாக வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி நேற்று ரோடு ஷோ நடத்தினார். அப்போது ராகுல் காந்தி பேசியதாவது:-

இந்திய அரசியல் அமைப்பை அழிக்க ஆர்.எஸ்.எஸ்.சும், பா.ஜ.க.வும் முயற்சிக்கின்றன. ஆனால், நாட்டின் அரசியல் அமைப்பை காக்க காங்கிரஸ் போராடுகிறது. இந்தியாவின் மிகப்பெரும் தொழில் அதிபர்களின் கருவி போல மோடி செயல்படுகிறார். வேலை வாய்ப்பு இன்மை, விலை உயர்வு பிரச்சினை பற்றி மோடி ஒருபோதும் பேசுவது இல்லை என்று கூறினார்.

## வரும் 20-ம் தேதி கேரளாவில் பிரியங்கா காந்தி பிரச்சாரம்

**திருவனந்தபுரம், ஏப் 17-**



கேரளாவில் வரும் 20-ம் தேதி காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரியங்கா காந்தி பிரச்சாரம் மேற்கொள்ளவுள்ளார்.

கேரள மாநிலத்தில் உள்ள 20 மக்களவை தொகுதிகளுக்கும் வருகிற 26-ம தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற உள்ளது. 20 தொகுதிகளிலும் மொத்தம் 194 பேர் போட்டியிடுகின்றனர். காங்கிரஸ், பாரதிய ஜனதா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது. பெரும்பாலான தொகுதிகளில் மும்முனை போட்டி நிலவுகிறது. பிரச்சாரம் நிறைவடைய இன்னும் 8 நாட்களே இருப்பதால், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிலும் காங்கிரஸ், பாரதிய ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சிகளின் வேட்பாளர்கள் போட்டி போட்டு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

இந்நிலையில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவதற்காக பிரியங்கா காந்தி வருகிற 20-ம் தேதி கேரளா செல்கிறார். அவர் திருவனந்தபுரம், பத்தினம்திட்டா, சாலக்குடி ஆகிய தொகுதிகளில் பிரச்சாரம் செய்து காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுகிறார்.

பிரியங்கா காந்தி பிரச்சாரம் செய்யும் போது, ராகுல் காந்தியும் அவருடன் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே ராகுல் காந்தி பிரச்சாரத்தில் ஈடுப ட்டு வரும் நிலையில், பிரியங்கா காந்தியும் கேரளா வர உள்ளதால் காங்கிரஸ் கட்சியினர் உற்சாகம் அடைந்துள்ளனர்.

## தென்சென்னை தொகுதிக்கான பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கை

### தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டார்

**சென்னை, ஏப் 17-**

தென்சென்னை தொகுதிக்கான பா.ஜ.க. தேர்தல் அறிக்கையை தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டார்.

தமிழகத்தில் வரும் 19-ம் தேதி ஒரே கட்டமாக பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இன்றுடன் பிரச்சாரமும் முடிவடையும் நிலையில் அரசியல் கட்சி தலைவர்கள், தங்கள் கட்சி வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தென் சென்னை தொகுதிக்கான பா.ஜ.க. தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் வேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் நேற்று வெளியிட்டார். அக்கா 1825 (365x5 years) என்ற தலைப்பில் தேர்தல், தமிழிசை சவுந்தரராஜனின் தென் சென்னை உத்தரவாதம் என்ற வாசகத்துடன் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த தேர்தல் அறிக்கையில், சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கோதாவரி ஆற்றுநீரை சென்னைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.

மத்திய நீர்வள அமைச்சகம் மற்றும் மாநில அரசுடன் ஒருங்கிணைந்து தென்சென்னைக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர், பாதாள சாக்கடை திட்டப்பணிகள் விரைவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மொத்தம் 25 நீர் நிலைகள் தூர்வாரப்பட்டு மீட்டெடுக்கப்படும். மிகப் பெரிய அளவில் மழை நீர் கால்வாய்கள் அமைக்கப்படும். விருகம்பாக்கம் கால்வாயை தூர் வார நடவடிக்கை எடுக்கப்படும்.

மழைக்காலங்களில் உடனடியாக உதவிக்கு வருவோர் பிரிவு, முதல் பதிலளிப்போர் முற்றம் உருவாக்கப்படும். மெட்ரோ ரயில்-2 திட்டப் பணிகளை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும். புதிய வழித்தடத்தில் மெட்ரோ-3 திட்டத்தை கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை மாநகர் போக்குவரத்து கழகத்தை ஒருங்கிணைத்து தென்சென்னை தொகுதிக்குள் வட்ட/ லூப் வழித்தடங்கள் தொடங்கப்படும். மேலும் மத்திய அரசின் வழிகாட்டுதலுடன் இந்த வழித்தடங்களில் மின்சார பேருந்துகள் அறிமுகப்படுத்தப்படும்.

வடபழனி, திருவான்மியூர், தி நகர் பேருந்து நிலையங்கள் புதுப்பிக்கப்படும். வேளச்சேரி-பரங்கிமலை (செயின்ட்தாமஸ் மவுண்ட்) இடையேயான பறக்கும் ரயில் வேளச்சேரி திட்டத்தை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை - கடலூர் இடையே கடல் வழி போக்குவரத்து ஏற்படுத்தப்படும். இதன் மூலம் கிழக்கு கடற்கரை சாலையில் போக்குவரத்து நெரிசல் குறையும். அம்மா உணவகங்கள் போல் ரயில் நிலையங்களில் மோடி உணவகங்கள் அமைக்கப்படும்.

சைதாப்பேட்டை, மாம்பலம் ரயில் நிலையங்கள் அதிநவீன வசதிகளுடன் மறுசீரமைக்கப்படும். சோழிங்கநல்லூரில் புதிதாக மிகப்பெரிய பன்னோக்கு இ.எஸ்.ஐ. அரசு மருத்துவமனை அமைக்கப்படும். நடமாடும் மருத்துவமனை திட்டம் தொடங்கப்படும். பிரதமரின் காப்பீட்டு திட்டம் தகுதி உள்ள அனைத்து பயனாளிகளுக்கும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒவ்வொரு சட்டப்பேரவை தொகுதியிலும் 3 இலவச பொது உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கப்படும். போதை மறுவாழ்வு மையம் ஒன்று ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் ஏற்படுத்தப்படும். நவீன வசதிகளுடன் சுற்றுசூழல் பூங்காக்கள் அமைக்கப்படும். பள்ளிக்கரணை சதுப்பு நில பகுதியை பறவைகள் சரணாலயமாக மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மடிப்பாக்கம் ஏரி, புழுதிவாக்கம் ஏரி, வேளச்சேரி ஏரி, நன்மங்கலம் ஏரி ஆகியவை தூய்மைப்படுத்தப்பட்டு அங்கு படகுக் குழாம்கள் அமைக்கப்படும். எம்.ஆர்.டி.எஸ் நிலையங்களில் உள்ள கூடுதல் இடங்களில் மாடி தோட்டங்கள் ஆகியவை அமைக்கப்படும். மிகப்பெரிய மீன் சந்தை அமைக்கப்படும். மீனவ கிராம பெண்களுக்கு மீனவ அக்கா குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு வங்கிக் கடன்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தென் சென்னையின் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் பணி செய்யும் மகளிருக்கான விடுதி அமைக்கப்படும். இளம்பெண் அரசியல்வாதிகள் ஊக்கப்படுத்தும் திட்டமாக வீரப் பெண் திட்டம் உருவாக்கப்படும். பணிபுரியும் பெண்களுக்காக மோடி இலவச ஷேர் ஆட்டோக்கள் இயக்கப்படும்.

கோயம்பேடு மார்க்கெட்டில் தொழிலாளர்களுக்கு இலவச தங்கும் அறை, மலிவு விலை உணவகம் ஏற்படுத்தப்படும். எம்.பியாக பெரும் ஊதியம் முழுவதையும் ஏழை மாணவர்களின் கல்விக் கனவை நனவாக்க செலவிடுவேன்.

தென் சென்னை தொகுதியில் இளைஞர் நாடாளுமன்றம் உருவாக்கப்படும். சென்னை சவுத் ஒலிம்பியாட் விளையாட்டு நிகழ்ச்சி ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும். அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய பிரத்தியேக விளையாட்டு அரங்கம் 2027-க்குள் பெரும்பாக்கத்தில் அமைக்கப்படும்.

நீட் உள்ளிட்ட மத்திய அரசின் கல்வி நிறுவனங்களுக்கான நுழைவுத் தேர்வுகளை எழுதுவதற்கான இலவச பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி தரப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமாரின் காரில் பறக்கும் படையினர் சோதனை

**மதுரை, ஏப் 17-**

உசிலம்பட்டியில் இருந்து உத்தப்ப நாயக்கனூருக்கு வாக்கு சேகரிக்க சென்ற முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமாரின் காரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் இன்று மாலை 6மணியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைகிறது. இதனால் தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் விறு விறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது.

இதையடுத்து தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க., காங்கிரஸ், உள்ளிட்ட பிரதான கட்சிகளின் முக்கிய தலைவர்கள் தமிழக முழுவதும் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். தேசிய தலைவர்களும் தமிழகத்தில் முற்றுகையிட்டு தங்கள் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதால் தேர்தல் களம் இறுதி கட்ட விறுவிறுப்பை எட்டி உள்ளது.

இந்நிலையில் தேனி பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக முன்னாள் அமைச்சர் ஆர். பி. உதயகுமார் தேனி தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

பொதுமக்கள் மற்றும் வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடாவை தடுக்கும் வகையில் தமிழகம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினரும் முக்கிய பகுதிகளில் முகாமிட்டு வாகனங்களை சோதனை நடத்தி வருகின்றனர்.

இந்த சோதனையின் போது உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்படும் பணம், தங்க நகைகள் மற்றும் பரிசுப் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள். மதுரையிலும் வாகன சோதனை தீவிரமாக நடந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று காலை உசிலம்பட்டி பகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார், உசிலம்பட்டியில் இருந்து உத்தப்ப நாயக்கனூர் நோக்கி வாக்கு சேகரிக்க சென்றார். அப்போது அங்கு இருந்த தேர்தல் பிறக்கும் படையினர் ஆர்.பி உதய குமார் மற்றும் வேட்பாளர் நாராயணசாமி ஆகியோர் சென்ற வாகனங்களை வழி மறைத்தனர்.

இதை தொடர் ந்து சாலையின் ஓரத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டது. இதையடுத்து தேர்தல் பறக்கும் படையினர் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கார் மற்றும் வேட்பாளர் நாராயணசாமி மற்றும் நிர்வாகிகளின் 10 வாகனங்களிலும் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது பணம் உள்ளிட்ட எவ்வித பொருள்களும் சிக்கவில்லை. சுமார் அரை மணி நேரம் நடந்த இந்த வாகன சோதனையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் வேட்பாளருடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

## அயோத்தியில் ராம நவமி விழா: ராமர் நெற்றியில் சூரிய ஒளிபடும் அபூர்வ நிகழ்வு

**அயோத்தி, ஏப் 17-**

அயோத்தியில் நடந்து வரும் ராமநவமி விழாவின் சிகர நிகழ்ச்சியாக இன்று கோவில் கருவறையில் வீற்றிருக்கும் பால ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளிக் கதிர் விழும் அபூர்வ நிகழ்வு நடைபெறுகிறது.

உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் கடந்த ஜனவரி மாதம் 22-ம் தேதி பால ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ராமர் கோவிலில் தற்போது ராமநவமி விழா நடந்து வருகிறது. விழாவின் 9- வது நாளான இன்று (17-ம் தேதி) ராம் லல்லாவின் சூரிய அபிஷேக மகோத்சவம் கோலாகலமாக நடக்கிறது.

இந்த விழாவின் சிகர நிகழ்ச்சியாக இன்று பகல் 12.16 மணிக்கு கோவில் கருவறையில் கம்பீரமாக வீற்றிருக்கும் பால ராமர் சிலையின் நெற்றியில் சூரிய ஒளிக் கதிர் விழும் அபூர்வ நிகழ்வு நடைபெற உள்ளது என கோவில் கட்டுமான குழு தலைவரும், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரியுமான நிருபேந்திர மிஸ்ரா தெரிவித்துள்ளார். சிலையில் சூரிய ஒளி நேரடியாக விழும் வகையில் கண்ணாடிகள், லென்சுகள் கொண்ட வடிவமைப்பு கோவில் கட்டிடம் அறிவியல் மற்றும் விஞ்ஞான உருவாக்கப்பட்டுள்ளது.

பால ராமரின் நெற்றியில் 75 மில்லி மீட்டர் அளவுக்கு திலகம் போல இந்த சூரிய கதிர்கள் தென்படும். இந்த அபூர்வ நிகழ்வு சுமார் 5 நிமிடம் நீடிக்கும். இதனை காண ஏராளமான பக்தர்கள் திரளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அயோத்தி ராமர் கோவில் திறக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதல் நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியை பக்தர்கள் காணும் வகையில் 100-க்கும் மேற்பட்ட எல்.இ.டி. திரைகள் அமைக்கப்பட்டுள்ளன. ராம நவமி விழாவையொட்டி கோவில் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன.

## பார்லி. தேர்தல் வாக்குப்பதிவு: கன்னியாகுமரி, கோவைக்கு சிறப்பு ரயில் அறிவிப்பு

**சென்னை, ஏப் 17-**

மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவை ஒட்டி சென்னையில் இருந்து கன்னியாகுமரி மற்றும் கோவைக்கு சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.


நாடு முழுவதும் மக்களவை பொதுத்தேர்தல் 7 கட்டங்களாக நடத்தப்படுகிறது. இதில், முதல் கட்டமாக வரும் 19-ம் தேதி, தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட சில மாநிலங்களில் வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் முடிந்து, கடந்த மார்ச் 31-ம் தேதி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

தமிழகத்தை பொருத்தவரை 39 மக்களவை தொகுதிகள் மற்றும் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தல் வரும் 19-ம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறுகிறது.


தமிழகத்தில் இறுதி நிலவரப்படி 39 மக்களவை தொகுதிகளிலும் 950 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். விளவங்கோடு தொகுதியில் 10 வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

இதனிடையே, வாக்குப்பதிவை ஒட்டி தமிழகத்தில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பேருந்து வசதிகள் தமிழக அரசு சார்பில் செய்யப்பட்டுள்ளன. தற்போது வாக்குப்பதிவை ஒட்டி சென்னையில் இருந்து கன்னியாகுமரி மற்றும் கோவைக்கு சிறப்பு ரயில்களை தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. அதன்படி, வரும் 18 மற்றும் 20-ம் தேதிகளில் சென்னை தாம்பரம் - கன்னியாகுமரிக்கும், சென்னையின் எழும்பூர் - கோவைக்கும் சிறப்பு ரயில் அறிவிக்கப்பட்டுள்ளது. இரு தினங்களிலும் தாம்பரம் - கன்னியாகுமரி சிறப்பு ரயில் மாலை 4.45 மணிக்கு தாம்பரத்தில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 4.40 மணிக்கு கன்னியாகுமரி செல்கிறது. அதே போல், சென்னை எழும்பூர் - கோவை சிறப்பு ரயில் வரும் 18 மற்றும் 20-ம் தேதி ஆகிய இரு தினங்களில் மாலை 4.25 மணிக்கு எழும்பூரில் இருந்து புறப்பட்டு மயிலாடுதுறை, கும்பகோணம், திருச்சி, திண்டுக்கல், பழனி வழியாக மறுநாள் காலை 8.20 மணிக்கு கோயம்புத்தூர் சென்றடைகிறது.


### தலைவர்கள் சொல்வதை படிங்க....




நாட்டிலேயே கர்ப்பப்பை வாடகைக்கு விடும் பெண்கள் உள்ள பகுதி குஜராத். அது தான் குஜராத் மாடல். அதுபோல் இந்தியாவில் அதிக திருடர்கள் தலைவர்களாக இருப்பது, தமிழகத்தில் தான். ஓட்டுக்காக காசு கொடுக்கிறவன் பாவி, அதை வாங்கி கொண்டு ஓட்டு போடுகிறவன் தேசத் துரோகி. மக்களுக்கு தண்ணீர் கூட தர முடியவில்லை என்றால் அது அரசு அல்ல, அது வெறும் தரிசு. **- சீமான்**



பிரதமர் மோடி தேர்தலுக்காக தமிழ் நாட்டிற்கு 9 முறை வந்துவிட்டார். அவர் 9 முறையல்ல 90 முறை வந்தாலும் பா.ஜ.க. தோல்வியடைவதை யாராலும் தடுக்க முடியாது. பிரதமர் மோடி கண்ணியமாக பேச வேண்டும். மாறாக தமிழக மக்கள் புண்படும் வகையில் பேசி வருகிறார். அவர் திருக்குறளையும், புறநானூறையும் இந்தியில் வாசித்து மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். **- வைகோ**



அக்னிபாத் திட்டம் இந்திய ராணுவத்தையும், நாட்டைக் காக்க வேண்டும் என்று கனவு காணும் இளைஞர்களையும் அவமதிக்கும் செயல். இந்த திட்டம் மோடியின் அலுவலகத்தில் செய்யப்பட்ட திட்டம். இன்டியா கூட்டணி அரசு அமைந்தவுடன், இந்த திட்டத்தை உடனடியாக ரத்து செய்து, பழைய நிரந்தர ஆள் சேர்ப்பு நடைமுறையை மீண்டும் அமல்படுத்துவோம். **- ராகுல் காந்தி**



கச்சத்தீவு குறித்து பிரதமர் முதல் எல்லோரும் பேசினார்கள்; ஆனால், பா.ஜ., வின் தேர்தல் அறிக்கையில் கச்சத்தீவு குறித்து ஏன் குறிப்பிடவில்லை? சாத்தியமே இல்லாத திட்டங்களை எல்லாம் கூறி பா.ஜ., மக்களை ஏமாற்றி திசை திருப்ப முயற்சிக்கிறது. ஒரே நாடு ஒரே தேர்தல், பொது சிவில் சட்டம் போன்றவை நாட்டை சர்வாதிகார பாதையில் செலுத்தும். **- ப.சிதம்பரம்**



மதுரை விமான நிலையத்திற்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடியிடம் பா.ஜ.க. தகவல் தொழில்நுட்ப பிரிவு மாநில செயலாளர் விஷ்ணு பிரசாத் வாழ்த்து பெற்றார்.

# நான் வெற்றி பெற்றால்... தென்காசி திமுக வேட்பாளர் ராணி ஸ்ரீ குமாரின் வாக்குறுதிகள்

சங்கரன் கோவில்,ஏப்.17

தென்காசி பாராளுமன்ற தொகுதி திமுக வேட்பாளராக போட்டியிடும் டாக்டர் ராணி ஸ்ரீ குமார் அளித்துள்ள வாக்குறுதிகள்கேரளா வனப்பகுதியில் மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள செண்பகவல்லி அணை உடைப்பை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,தென்காசி பாராளுமன்ற தொகுதியில் தென்காசி, கடையநல்லூர், சங்கரன் கோவில், இராஜபாளையம், ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆகிய முக்கிய நகரங்கள் உள்ளன. எனவே செங்கோட்டையில் இருந்து மதுரை வரை இயக்கப்படும் இரயில் காலை மற்றும் மதிய வேளைகளில் மட்டும் இயக்கப்படுகிறது. இந்த இரயில் கூடுதலாக தினமும் இரண்டு முறை இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சங்கரன் கோவில் இரயில்வே பாதையில் தினந்தோறும் 10 க்கும் மேற்பட்ட இரயில்கள் சென்று வருவதால் சங்கரன் கோவில் என்.ஜி.ஓ காலணி சாலையிலும் சங்கரன்கோவில் - வடக்குபுதூர் சாலையிலும் இரயில்வே பாதையில் மேம்பாலங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் சங்கரன்கோவில் நகரம், புளியங்குடி நகரம் மற்றும் சுப்புலாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் விசைத்தறி தொழிலை பாதுகாக்க ஒன்றிய அரசின் கொள்கையால் நூல் விலை உயர்வால் இன்றைய சூல்நிலையில் விசைத்தறி தொழில் கடும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. எனவே இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் நூல்கள்வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கும் தடைகள் விதிப்பதற்கும், நூல் விலை உயராமல் கட்டுக்குள் வைப்பதற்கும் பாராளுமன்றத்தில் வலியுறுத்துவேன் எனவும், சங்கரன்கோவிலில்ஜவுளி பூங்கா மற்றும் சாயத் தொழிலுக்கு பொது சுத்திகரிப்பு ஆலை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,சங்கரன்கோவில் பகுதியில் சங்கரன்கோவில் பகுதிகளில் பூ உற்பத்தி அதிகமாக உள்ளதால் அரசு சார்பில் வாசனை திரவிய தொழிற்சாலை (செண்ட்) அமைக்கநடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சங்கரன்கோவில், புளியங்குடி, கடையநல்லூர் நகரத்தை சுற்றி உள்ள எலுமிச்சை விவசாயிகளுக்கு கைகொடுக்கும் வகையில் எலுமிச்சை பதப்படுத்தும்



நவீன கிட்டங்கி உருவாக்கப்படும் எனவும், தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் அரசு விவசாய கல்லூரி ஒன்றை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.தென்காசி மாவட்டத்தில் ஆவின் நிறுவனம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் அனைத்து கிராம பகுதி மக்களுக்கும், போதிய அளவு குடிநீர் வழங்குவதற்கு புதிய குடிநீர் திட்டத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் காட்டுப்பன்றியால் அப்பகுதியில் விவசாயம் அழிந்து வருகிறது. இதில் விவசாயிகளை பாதுகாக்கும் பொருட்டு வனவிலங்குகள் சட்டத்திலிருந்து காட்டுப்பன்றியை அகற்ற வலியுறுத்துவேன் எனவும் சங்கரன்கோவில் சிப்காட் வளாகம் மற்றும் தென்காசி, இராஜபாளையம் ஆகிய பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் புதிய தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.தென்காசி பாராளுமன்ற தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.தென்காசி சந்திப்பு இரயில் நிலையத்தில் நீர் ஏற்றும் வசதி ஏற்படுத்தி தென்காசி இரயில் நிலையத்தை முனையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். தென்காசி -செங்கோட்டை இடையே இரட்டை அகல ரயில் பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் சங்கரன்கோவில் - இராஜபாளையம் இடையே அமைந்துள்ள கரிவலம்வந்தநல்லூர், சோழபுரம் ஆகிய இரயில் நிலையத்தை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். செங்கோட்டையில் மின்சார ரயில்களை பராமரிக்கும் வகையில் மெமு பணிமனை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். திருச்செந்தூரிலிருந்து நெல்லை, தென்காசி வழியாக கொல்லம் வரை உள்ள ரயில்நெல்லையிலிருந்து தென்காசி வழியாக சென்னை, பெங்களூர், மங்களூர், மும்பை ஆகிய நகரங்களுக்கு தினசரி இரயில்கள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தென் மாவட்டங்களில் முக்கிய கோவில்களான சங்கரன்கோவில் ஸ்ரீ சங்கரநாராயண சுவாமி திருக்கோவில், தென்காசி காசி விஸ்வநாதர் திருக்கோவில், வைணவ தலமான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவில் ஆகிய திருக்கோவில்களில் பக்தர்கள் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும்.தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்தபடியாக தென்காசி மாவட்டத்தில் இயற்கை விவசாயத்தில் அதிக விளை பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது.

எனவே இயற்கை முறையில் விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்கு அடிப்படை பயிற்சியும் வங்கிக்கடனும் அளித்து இயற்கை விவசாயத்தை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவிலுக்கு செல்லும் வழியில் நீர் ஒடைகள் அமைந்துள்ளதால் பக்தர்கள் கோவிலுக்கு செல்வதில் மிகுந்த சிரமம் உள்ளது.பக்தர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாலம் கட்டுவது ஒன்றிய அரசின் அனுமதியோடு பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.இராஜபாளையம் சுற்று வட்டாரப் பகுதிகளில் நெசவு, ஜின்னிங், கார்மென்ட் உள்ளிட்ட தொழிற்சாலைகள் அதிக அளவில் இயங்கி வந்தன. மத்திய அரசின் ஜிஎஸ்டி உள்ளிட்ட தொழில் கொள்கையினால் பல சிறு குறுந்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. எனவே புதிய இந்தியா கூட்டணி ஆட்சி அமைந்தவுடன் மூடப்பட்ட தொழிற்சாலைகள் மீண்டும் புத்துணர்ச்சியுடன் நடைபெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தென்காசி மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள மிகப்பெரிய சுற்றுலா தலமான குற்றாலத்திற்கு சுற்றுலா பயணிகள் சென்று வருவதற்கு இரயில்கள் உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள் புதிதாக உருவாக்கப்படும். மேலும் சுற்றுலாதலம் விரிவடைவதற்கான நவீன வசதிகள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் மக்களின் தேவையான கோரிக்கைகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வாக்குறுதி அளித்துள்ளார்.

# நத்தம் பகுதியில் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளரை ஆதரித்து முன்னாள் அமைச்சர்கள் தீவிர பிரச்சாரம்



நத்தம், ஏப். 17

திண்டுக்கல் நாடாளுமன்ற தொகுதியில் அதிமுக கூட்டணியில் எஸ்.டி.பி.ஐ கட்சி சார்பில் முகமது முபாரக் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து நேற்று நத்தம் அருகே ஊராளிபட்டியில் முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விசுவநாதன் ஆகியோர் வேட்பாளர் முகமது முபாரக்கிற்கு ஆதரவு கேட்டும். இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தும் பேசினர்.

தொடர்ந்து சமுத்திராபட்டி, பூதகுடி, சிறுகுடி, கோசுகுறிச்சி, செந்துறை, பிள்ளையார் நத்தம், மணக்காட்டூர், குட்டுப்பட்டி, புதுப்பட்டி, ஆவிச்சிபட்டி, வேலம்பட்டி மற்றும் நத்தம் பஸ் நிலைய ரவுண்டானா உள்ளிட்ட பகுதிகளிலும் முன்னாள் அமைச்சர்களும், வேட்பாளரும் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர். இதில் கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன்,அதிமுக ஒன்றிய செயலாளர்கள் சின்னு, மணிகண்டன், மாவட்ட ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் சின்னாக்கவுண்டர், மாவட்ட மாணவரணி இணை செயலாளர் அசாருதீன், அவைத்தலைவர்கள் பிறவிக்கவுண்டர், சேக்ஒலி உள்ளிட்ட அதிமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூரில் அதிமுக சார்பில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம்



கடையநல்லூர் ஏப்.17:

கடையநல்லூரில் அதிமுக சார்பில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம். மாவட்ட செயலாளர்கள் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா மற்றும் செல்வ மோகன் தாஸ் பாண்டியன் ஆகியோர் தலைமை தாங்கினார் மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் அய்யாதுரை பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் பொய்கை மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார் நகர செயலாளர் முருகன் வரவேற்றார் தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் அதிமுக சார்பாக போட்டியிடும் புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்களிடம் வாக்கு கேட்டு பேசியதாவது கூட்டத்தில் அவர் பேசியதாவது எந்த திட்டங்களையும் செயல்படுத்தாமல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றி தேர்தல் களத்தில்

திமுக கூட்டணி ஓட்டு கேட்பதாக அதிமுக கூட்டணி கட்சி வேட்பாளர் புதிய தமிழகம் நிறுவனத் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கடந்த 2019 ஆண்டு தேர்தலில் 525 தேர்தல் வாக்குறுதிகளை திமுக பொதுமக்களிடம் வழங்கியது இவற்றில் ஒன்றைக் கூட திமுக அரசு முழுமையாக நிறைவேற்றவில்லை இந்த கட்சியின் சார்பில் வெற்றி பெற்ற எம்பிக்கள் அனைவரும் நாடாளுமன்றத்தில் தமிழக நலனுக்காக குரல் கொடுக்கவில்லை இந்த பகுதியில் அதிகமாக காணப்படும் கனிமவள கொள்ளையை ஏன் தடுக்கவில்லை இப்பகுதியில் உள்ள அணைக்கட்டுகள் பராமரிக்கப்படாமல் நீர் நிலைகள் உள்ளது இதற்கான பணிகளையும் திமுக அரசு மேற்கொள்ளவில்லை இந்த தொகுதியில் பொதுமக்களால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வரும் கோரிக்கைகள் அனைத்தையும் நிச்சயமாக நான் வெற்றி பெற்றால் நிறைவேற்றி தருவேன் இந்த முறையும் திமுகவிற்கு ஆதரவாக பொதுமக்கள் இருந்து விடக்கூடாது ரூபாய் 300 கொடுத்தாலும் 400 கொடுத்தாலும் 500 கொடுத்தாலும் வாங்கிவிட்டு ஓட்டு போட்டு ஏமாந்து விடாதீர்கள் தமிழகத்திலிருந்து கேரளாவிற்கு கடத்தப்படும் மணல் கொள்கைகளை தடுத்து நிறுத்துவேன் அனைத்து மகளிருக்கும் ஆயிரம் ரூபாய் என கூறிவிட்டு தற்போது தகுதியானவருக்கு மட்டும் ஆயிரம் ரூபாய் என திமுக பெண்களை ஏமாற்றி வருகிறது ஆட்சிக்கு வந்தால் மதுக்கடைகளை ஒழிப்போம் விதவைகள் அதிகமாகி விட்டனர் திமுக ஆட்சிக்கு வந்தால் மதுக்கடைகள் மூடப்படும் என கூறிய கனிமொழி இன்று வரை மதுக்கடைகள் ஒழிக்கப்படவில்லை மேல் கொண்டும் கடைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார் இவர்களுக்கா வாக்களிக்க போகிறீர்கள் என கேள்வி எழுப்பினார். நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் , கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# அ.தி.மு.க - தே.மு.தி.க கூட்டணிக்கு 40 தொகுதிகளிலும் வெற்றி உறுதி

## திருமங்கலத்தில் பிரேமலதா விஜயகாந்த் பேச்சு



திருமங்கலம்.ஏப்ரல்.17.

அ.தி.மு.க-தே.மு.தி.க கூட்டணிக்கு மக்கள் மத்தியில் கிடைத்துள்ள அமோக வரவேற்பால் 40 தொகுதிகளிலும் வெற்றி உறுதி என்று விருதுநகர் பார்லி தொகுதி தே.மு.தி.க வேட்பாளர் விஜயபிரபாகரை ஆதரித்து திருமங்கலம் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற பிரச்சார கூட்டங்களில் தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் பேசினார்.

விருதுநகர் நாடாளுமன்ற தொகுதியில் அ.தி.மு.க தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் தே.மு.தி.க வேட்பாளர் விஜயபிரபாகரை ஆதரித்து தொகுதி முழுவதிலும் அனல் பறக்கும் பிரச்சாரம் நடைபெற்று வருகிறது.இதன் ஒருபகுதியாக விருதுநகர் பார்லி தொகுதியிலுள்ள திருமங்கலம் சட்டமன்ற தொகுதி கப்பலூர், திருமங்கலம் நகர், செங்கப்படை மற்றும் டி.கல்லுப்பட்டி ஆகிய பகுதிகளில் முன்னாள் அமைச்சரும்,தமிழக சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவருமான ஆர்.பி.உதயகுமார் முன்னிலையில் தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்டு தீவிர வாக்குச் சேரிப்பில் ஈடுபட்டார்.அப்போது ஆயிரக்கணக்கான பெண்கள் நீண்டவரிசையாக நின்று மலர்களை தூவி தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்திற்கு எழுச்சிமிகு வரவேற்பு கொடுத்தனர். அப்போது அவர் பேசியதாவது:

அ.தி.மு.க-தே.மு.தி.க கூட்டணி மகத்தான வெற்றி கூட்டணியாக அமைந்துள்ளது. இந்த தொகுதியில் போட்டியிடும் விஜயபிரபாகரன் நிச்சயமாக வெற்றி பெற்று அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றிடுவார்.குறிப்பாக திருமங்கலம் தொகுதி மக்களுக்கு இடையூறாக உள்ள கப்பலூர் டோல்கேட் நிச்சயமாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.ரயில்வே மேம்பால பணிகள் விரைவாக நடந்து முடிந்திடவும், திருமங்கலத்தில் அனைத்து ரயில்களும் நின்று சென்றிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.அதே போல் திருமங்கலத்தில் புதிய பேருந்துநிலையம், வாசைன திரவிய தொழிற்சாலை அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.விஜயபிரபாகரை வெற்றி பெறச் செய்தால் விருதுநகர் தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றிக் காட்டுவார்.இங்கு எம்.பி.யாக இருந்தவர் மக்கள் பிரச்சனைகளை கண்டு கொள்ளாமல் டெல்லியில் இருந்துவிட்டார்.அவர் டெல்லிக்காரர் ஆனால் விஜயபிரபாகர் விருதுநகர் தொகுதிக்காரர்.அவர் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிடுவார். கேப்டனுக்கு ஒரு விருதாச்சலம் போல் விஜயபிரபாகருக்கு ஒரு விருதுநகர். அ.தி.மு.க-தே.மு.தி.க கூட்டணிக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு உள்ளது. நாளை நமதே,நாற்பதும் நமதே.இந்த கூட்டணி மகத்தான வெற்றி பெறுவது நிச்சயம்.கேப்டனின் பெண்கள் நாட்டின் கண்கள் திட்டத்தின் மூலம் எங்களது சொந்த செலவில் விருதுநகர் தொகுதியிலுள்ள பெண்களுக்கு ஆண்டிற்கு 6 லட்சம் வீதம் 5 ஆண்டுகளில் 30லட்சம் ரூபாய் வழங்கப்படும்.இந்த திட்டம் கேப்டன் பிறந்தநாளான ஆகஸ்ட் 25ம் தேதி சொந்த செலவில் வழங்கப்படும்.பொய் வாக்குறுதிகளை கொடுத்து வரும் தி.மு.க-காங்கிரஸ் கூட்டணியை 40 தொகுதிகளிலும் மக்கள் விரட்டியடித்து வருகின்றனர்.எனவே விருதுநகர் தொகுதியில் அ.தி.மு.க கூட்டணி வேட்பாளர் விஜயபிரபாகருக்கு கொட்டும்முரசு சின்னத்தில் வாக்களித்து அவரை அமோக வெற்றி பெறச் செய்திடுங்கள் என்று பேசினார்.இதனை தொடந்து டி.கல்லுப்பட்டியில் நடைபெற்ற மாபெரும் பிரச்சார கூட்டத்தில் தே.மு.தி.க பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த்,சட்டமன்ற எதிர்கட்சி துணைத்தலைவர் ஆர்.பி.உதயகுமார் சிறப்புரையாற்றி பேசினார்கள்.இந்த பிரச்சார நிகழ்ச்சிகளில் அ.தி.மு.க, தே.மு.தி.க நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தேர்தல் சிறப்பு ரயில் திருமங்கலத்தில் நின்று சென்றிட பொதுமக்கள் கோரிக்கை

திருமங்கலம். ஏப்.17.

வரும் ஏப்ரல் 19ம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு மக்கள் ஏராளமானோர் தங்களது சொந்த ஊருக்கு சென்று ஜனநாயக கடமையான வாக்களிப்பை நிறைவேற்றிட திட்டமிட்டு வருகின்றனர்.அதற்கேற்ற வகையில் மக்கள் சிரமமின்றி தங்களது சொந்த ஊருக்கு பயணிக்கும் வகையில் அரசு சார்பில் சிறப்பு பேருந்துகள் விடப்படவுள்ளது.இந்நிலையில் பொதுமக்கள் சிரமமின்றி வாக்குகளிப்பதை உறுதிப்படுத்திடும் வகையில் தற்போது சென்னை தாம்பரத்திலிருந்து மதுரை வழியாக கன்னியாகுமரிக்கும், சென்னை எழும்பூரிலிருந்து கோவைக்கும் சூப்பர் பாஸ்ட் தேர்தல் சிறப்பு ரயில்கள் தெற்கு ரயில்வே சார்பில் அறிவிக்கப்பட்டு உள்ளது.

தேர்தலில் வாக்களித்து ஜனநாயக கடமையை நிறைவேற்றிட சொந்த ஊர்களுக்கு சென்றிடும் மக்களுக்கு இந்த சிறப்பு ரயில் உபயோகமாக இருப்பினும் விருதுநகர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம் ரயில் நிலையத்தில் நிறுத்தம் வழங்கப் படாததால் சென்னை உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் தங்கி பணியாற்றிடும் மக்கள் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளனர். எனவே திருமங்கலம் ரயில் நிலையத்தில் தேர்தல் சிறப்பு ரயில் நின்று சென்றிட தெற்கு ரயில்வே உதவிட வேண்டும் என வாக்காளர் பெருமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மதுரை சித்திரை திருவிழாவின் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து கலெக்டர் சங்கீதா தலைமையில் நேற்று நடந்த ஆய்வுக்கூட்டத்தில் மாநகர காவல் ஆணையர் லோகநாதன், மாநகராட்சி ஆணையாளர் தினேஷ்குமார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அர்விந்த், மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# அருப்புக்கோட்டையில் நடமாடும் மாதிரி வாக்குபதிவு மையம் மூலம் விழிப்புணர்வு

அருப்புக்கோட்டை. ஏப்.17.

அருப்புக்கோட்டையில் 18 வயது நிரம்பிய முதல் மற்றும் இளம் தலைமுறை, மாற்றுத்திறனளிகள், முதியோர்கள் என அனைத்து தரப்பினரிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி அருப்புக்கோட்டை எஸ் பி கே கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலர் கண்ணன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஆய்வாளர் பீமராஜன் ,எஸ்.பி.கே. கல்லூரி முதல்வர் செல்லத்தாய் மற்றும் பேராசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

நடமாடும் பேருந்து மாதிரி வாக்குப் பதிவு மின்னணு இயந்திரமும் அமைக்கப்பட்டு, வாக்களிப்பு பயிற்சியும் பொது மக்களுக்கு வழங்கப்படும் விதத்தில் ஏற்பாடுகள் செய்திருந்தனர். இந்த மாதிரி வாக்குப்பதிவு நடமாடும் பேருந்தில் திருச்சுழி, அருப்புக்கோட்டை அரசு கலைக்கல்லூரி நரிக்குடி அருப்புக்கோட்டை பேருந்து நிலையம் மற்றும் பொதுமக்கள் அதிக பழங்கும் இடங்களில் நிறுத்தி வைத்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்பட்டது

# ஒட்டன்சத்திரத்தில் தேர்தல் விழிப்புணர்வு பேரணி

ஒட்டன்சத்திரம். ஏப்.17.

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் பழனியாண்டவர் மகளிர் கல்லூரியின் சார்பில் நூறு சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தை வலியுறுத்தி நகரின் முக்கிய பகுதி வழியாக சென்ற பேரணியை டிஎஸ்பி முருகேசன் துவக்கி வைத்தார் . பேரணியில் சார்பு ஆய்வாளர்கள் சவடமுத்து, ரஞ்சித் , கிராம நிர்வாக அலுவலர் கோவிந்தராஜ், கிராம உதவியாளர்கள் விஜயபாஸ்கரன், பைசல் முகமது, கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் யமுனா யசோதா உள்ளிட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

படிவம் 26

(1961ஆம் ஆண்டு தேர்தல் நடத்துவது குறித்த விதி 4A–யைக் காண்க)

**தேர்தல் நடத்தும் அதிகாரியின் முன்னிலையில், வேட்பாளர் வேட்புமனுவுடன் அளிக்க வேண்டிய உறுதி மொழிப்பத்திரம்**

2024ஆம் ஆண்டு, மக்களவைக்கு நடைபெறும் தேர்தல் 38 திருநெல்வேலி பாராளுமன்ற தொகுதி

பகுதி–A

சுப்பிரமணியன் என்பவரின் மகனும் 43 வயதுடைய கதவு எண். 35/89, மாரியம்மன் கோவில் தெரு, திருவண்ணாதபுரம், பாளையங்கோட்டை தாலுகா, திருநெல்வேலி மாவட்டம்– 627 353, என்ற முகவரியில் வசிக்கின்ற இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு வேட்பாளருமாகிய சு.சுந்தரமுனீஸ்வரன் என்கிற நான், இதன் சத்தியப் பிரமாணம் செய்து, கீழ்க்கண்டவாறு உறுதியளிக்கிறேன்.

அட்டவணை

| | | |
|---|---|---|
| a | முதல் தகவல் அறிக்கை எண் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்தின் பெயர் மற்றும் முகவரியுடன் | 1. FIR No.123/2018, பாளையங்கோட்டை காவல்நிலையம், திருநெல்வேலி மாநகரம்.<br>2. FIR No.463/2018, பாளையங்கோட்டை காவல்நிலையம், திருநெல்வேலி மாநகரம். Charge Sheet Not Tiled<br>3. FIR No.1497/2020, பாளையங்கோட்டை காவல்நிலையம், திருநெல்வேலி மாநகரம்.<br>4. FIR No.94/2021, பாளையங்கோட்டை காவல்நிலையம், திருநெல்வேலி மாநகரம்.<br>5. FIR No.117/2023, நாலாட்டின்புதூர் காவல்நிலையம், தூத்துக்குடி மாவட்டம். |
| b | வழக்கு எண் நீதிமன்றத்தில் பெயருடன் | 1. CRLA 57/23 கூடுதல் மாவட்ட நீதிமன்றம்–4, திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றம். FIR No. 123/2018<br>2. SC155/2022 கூடுதல் மாவட்ட நீதிமன்றம் 2 (PCR), திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றம். FIR No. 1497/2020<br>3. CC 2815/2022 குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.1, திருநெல்வேலி மாவட்ட நீதிமன்றம். FIR No. 94/21<br>4. CRLOP (MD) 368/2024, CRLMP (MD)242/2024 உயர்நீதிமன்றம், மதுரை கிளை. FIR No. 117/2023 |

சரிபர்ப்பு

மேற்சொன்ன பெயருடைய உறுதியளிப்பராகிய நான், எனக்கு நன்கு தெரிந்த வரையிலும் நம்பிக்கைக்கு உகந்த வகையிலும், இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ளவை உண்மையானது மற்றும் சரியானது என்றும் எந்தப்பகுதியும் பொய்யானவை அல்ல என்றும், எவையும் இதிலிருந்து மறைக்கப்படவில்லை என்றும் இதனால் சரிபார்ப்பு செய்து உறுதியளிக்கிறேன். மேலும், நான் பின்வருமாறு உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி அளிப்பவர்

# தூத்துக்குடியில் கனிமொழி இன்று இறுதி கட்ட தேர்தல் பிரச்சாரம்: அமைச்சர் கீதாஜீவன் அறிக்கை

**தூத்துக்குடி,ஏப்.17-**
தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் கனிமொழி கருணாநிதி இன்று (ஏப்.17) இறுதிகட்ட தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

இது தொடர்பாக திமுக தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கீதாஜீவன் வெளியிட்ட அறிக்கையில், "தூத்துக்குடி நாடாளுமன்றத் தொகுதியில் இன்டியா கூட்டணி சார்பில் தி.மு.க. வேட்பாளராக கனிமொழி கருணாநிதி போட்டியிடுகிறார்கள். கிராமம், கிராமமாகச் சென்று வாக்கு சேகரித்துவரும் அவர் இன்று புதன்கிழமை அன்று தூத்துக்குடி, கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 3 சட்டமன்ற தொகுதிகளில்இறுதிகட்ட தேர்தல் பிரச்சாரம் செய்திட இருக்கிறார்.

அதன்படி இன்று புதன்கிழமை மாலை 3.00 மணி அளவில் கோவில்பட்டி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கயத்தாறு புதிய பேரூந்து நிலையம் முன்பு தேர்தல் பிரச்சாரம் செய்யும் அவர் தொடர்ச்சியாக மாலை 3.30 மணி அளவில் கோவில்பட்டி மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஆலம்பட்டி விலக்கில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு வாக்கு சேகரிக்கிறார்.அதன்பின் மாலை 4.00 மணி அளவில் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட எட்டையபுரம் பேரூந்து நிலையம் முன்பு தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்.இறுதி கட்டமாக மாலை 4.30 மணிக்கு தூத்துக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தூத்துக்குடி விவிடிமெயின் ரோடு, அண்ணாநகர் 7 - வது தெரு டூவிபுரம் 5 வது தெரு சந்திப்பில் இன்டியா கூட்டணி நடைபெறும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு தனது இறுதிகட்ட பிரச்சாரத்தை நிறைவு செய்கிறார்.அந்தந்த பகுதிக்கு உட்பட்ட தி.மு.கழக நிர்வாகிகள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திடவும்,இன்டியா கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள், பொது மக்கள் அனைவரும் பெருந்திரளாகக் கலந்து கொள்ளவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவில்பட்டியில் மூவேந்தர் மருதம் முன்னேற்றகழகம் சார்பில் வீரன் சுந்தரலிங்கதேவேந்திரர் சிலைக்கு மரியாதை

**கோவில்பட்டி,ஏப்.17-**
கோவில்பட்டியில் வீரன் சுந்தரலிங்கதேவேந்திரனாரின் 254 ஆவது பிறந்தநாள்விழாவை முன்னிட்டு அவரது சிலைக்கு மூவேந்தர் மருதம் முன்னேற்ற கழக நிறுவனத்லைவர் பா.அன்புராஜ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாநிலகொள்கைபரப்பு செயலாளர் முனியசாமி ää மாவட்டசெயலாளர் பேச்சிமுத்துää மாவட்ட இளைஞரணி செயலாளர் பால்துரை ää மேற்கு ஒன்றியசெயலாளர் கனகராஜ்ää கிழக்கு ஒன்றியசெயலாளர் பொன்மாட



சாமிää தென்காசி ஒன்றிய துணை செயலாளர் ராக்கய்யாää ஒன்றிய இளைஞரணி செயலாளர் கோகுல் மாவட்ட இளைஞரணிசெயலாளர் பிரகாஷ் மாவட்டமகளிர் அணி செயலாளர் சுப்புலட்சுமிää ஒன்றிய மகளிர் அணி செயலாளர் முத்துலட்சுமிää மாவட்ட மகளிர் அணி செயலாளர் அமுதா கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் ஜனநாயக கடமையை நிறைவேற்றிய எஸ்.பி.பாலாஜி சரவணன்



**தூத்துக்குடி,ஏப்.17-**
தூத்துக்குடியில் பாராளுமன்ற தேர்தலில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாலாஜி சரவணன் தபால் ஓட்டை பதிவு செய்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

தமிழகத்தில் பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு ஒரே கட்டமாக ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெறுகிறது. இதில், அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் தபால் வாக்கு செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் காவல் துறையினருக்கான தபால் ஓட்டு வாக்குப்பதிவு நடைபெறுவதையொட்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எல். பாலாஜி சரவணன் தனது தபால் ஓட்டை பதிவு செய்து தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

# வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான 2ஆம் கட்ட பயிற்சி :கலெக்டர் லட்சுமிபதி ஆய்வு



**தூத்துக்குடி,ஏப்.17-**
விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சியை தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் லட்சுமிபதி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.தூத்துக்குடி பாராளுமன்ற மக்களவைப் பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு வருகின்ற 19ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதைத் தொடர்ந்து, விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடிகளில் தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட மறு பயிற்சி வகுப்பு எட்டயபுரம் சி.கே.டி மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறுகிறது.இப்பயிற்சியை தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/கோ.லட்சுமிபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி, வாக்குச் சாவடி அலுவலர்களுக்கு தபால் வாக்கு வழங்குவதற்கும், வழங்கப்பட்டுள்ள தபால் வாக்குகளை மீண்டும் செலுத்துவதற்கும் ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு வசதி மையத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# கோவில்பட்டியில் அதிமுக சார்பில் வீரன் சுந்தரலிங்கதேவேந்திரர் சிலைக்கு கடம்பூர்ராஜீ எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை

**கோவில்பட்டி,ஏப்.17-**
கோவில்பட்டியில் வீரன் சுந்தரலிங்கதேவேந்திரனாரின் 254 ஆவது பிறந்தநாள்விழாவை முன்னிட்டு அவரது சிலைக்கு அதிமுக சார்பில் கடம்பூர்ராஜ் எம்.எல்.ஏ. மாலை அணிவித்தார். யூனியன்வைஸ்சேர்மன் பழனிச்சாமிää கிழக்கு ஒன்றியசெயலாளர் அன்புராஜ்ää மாவட்ட இளைஞர்பாசறை செயலாளர் கவியரசன்ää நகரசெயலாளர் விஜயபாண்டியன்ää மாவட்ட அம்மாபேரவை இணைசெயலாளர் நீலகண்டன்ää நகராட்சி கவுன்சிலர் செண்பகமூர்த்திää மாவட்ட வர்த்தகஅணி செயலாளர்; ராமர்ää மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர்அணி செயலாளர் லெட்சுமணபெருமாள்ää மாவட்ட மகளிர்அணி செயலாளர் பத்மாவதிகனகசுந்தரம்ää மாவட்ட கலைபிரிவு செயலாளர் போடுசாமிää மேற்குஒன்றியசெயலாளர் அழகர்சாமிää முன்னாள் மாவட்டசேர்மன் சத்யாää மாநிலபொதுகுழு உறுப்பினர் ராமச்சந்திரன்ää ஆவின் கூட்டுறவு சங்க தலைவர் தாமோதரன்ää அம்மாபேரவை நகரசெயலாளர் ஆபிர



காம்அய்யாத்துரைää மாவட்டபொருளாளர் அம்பிகா வேல்மணிää மாவட்ட மாணவர்அணி துணைதலைவர் செல்வக்குமார்ää இளைஞர் பாசறை வானரமூட்டிப ழனிக்குமார்ää மாவட்ட மாணவர்அணி துணைதலைவர் தாஸ்அய்யனுராஜ்ää மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஹேமலாää திட்டங்குளம் ஜெயந்திசரவணசாமிää அன்னைதெரசாநகர் கிளைசெயலாளர் இலக்கிய அணி மேற்கு ஒன்றியசெயலாளர் மாரிமுத்துää மூப்பன்பட்டி கிளைசெயலாளர் முருகன்ää முன்னாள் நகராட்சி வைஸ்சேர்மன் ஏ.எஸ். ரத்தினவேல்ää வழக்கறிஞர்கள் சங்கர்கணே~;ää பழனிக்குமார்ää நகரஅவைதலைவர் அப்பாசாமிää ஒன்றிய துணைசெயலர் பீக்கிலிபட்டி மணிராஜ்ää மாவட்ட செயற்குழுஉறுப்பினர் நாலாட்டின் புத்தூர் அய்யன்ராஜ்ää மகளிரணி கோமதிஅய்யலுராஜன் ää பாண்டவர்மங்கலம் 8வது வார்டு கவுன்சிலர் சரவணன் ää ஒன்றியதுணைசெயலாளர் முருகலட்சுமிää மேலஈரால் கிளைசெயலர் பொன்ராஜ்ää ராஜீவ்நகர் கிளைசெயலாளர் விஜயன்ää முன்னாள் ஒன்றியகவுன்சிலர் அங்குசாமிää உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

# கோவில்பட்டி மங்களவிநாயகர் கோவிலில் அன்னதானம்



**கோவில்பட்டி,ஏப்.17-**
கோவில்பட்டி அருள்மிகு ஸ்ரீமங்களவிநாயகர்திருக்கோவிலில் ஸ்ரீ ராகவேந்திரா சேவா அறக்கட்டளை சார்பாக 31வது மாத அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தொழிலதிபர் கோபால்சாமி தலைமை வைத்தார். தொழிலதிபர் முத்துராஜன்ää ஜெயராமன்ää முன்னிலை வகித்தனர். தொழிலதிபர் ராஜா என்ற விஜி பொங்கல் பிரசாதம் வழங்கினார். கோவில்பட்டி நகராட்சி ஆணையாளர் கமலா அன்னதானத்தை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் அறக்கட்டளை நிறுவனர் சீனிவாசன்ää தலைவர் ஜெயக்கொடிää செயலாளர் ஜோதிகாமாட்சிää பொருளாளர் கார்த்திகேயன்ää செயற்குழு உறுப்பினர்கள் நடராஜன்ää பாலமுருகன்ää தங்கராஜ்ää லவராஜாää முருகன்ää காளிராஜ்ää மாரிமுத்துää சுப்பிரமணியன்ää பாண்டியன்ää சண்முகசுந்தரம்ää முத்துமாரியப்பன்ää தொழில்அதிபர்கள் தங்கவேல்ää மகேந்திரன்ää தனபால்ää கொல்லம் சேகர்ää அசோக்ää ஆக்ராகாளிராஜ்ää சிந்துபானுää மாரியப்பன்ää வசந்தகுமார்ää பஜ்ரங்நர்த்தனாலயா கணபதிää ஆசிரியர்கள் ஜீவானந்தம்ää சக்திவேல்ää அன்பழகன்ää கூட்டுறவு பேங்க் கண்ணன்ää பசுமை இயக்கம் செந்தில்ää மிலிட்டரி சந்திரசேகர்ää டாக்டர் ராஜேந்திரன்ää கலந்துகொண்டனர். நடராஜன் நன்றி கூறினார்.

# குற்றாலம் அருகே முன்னாள் திமுக அமைச்சரின் அறையில் வருமான வரித்துறையினர் சோதனை

**தென்காசி,ஏப்.17-**
தென்காசி மாவட்டம் குற்றாலம் பழைய குற்றாலம் அருகே முன்னாள் தமிழக அமைச்சர் சுரேஷ்ராஜன் தங்கியிருந்த அறையில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்திய சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது.

தமிழகத்தின் முன்னாள் சுற்றுலாத்துறை அமைச்சர் சுரேஷ்ராஜன் இவர் திருநெல்வேலி பாராளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியின் திமுக தேர்தல் பொறுப்பாளராக செயல்பட்டு வருகிறார்.

இவர் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கடையம் ஒன்றிய பகுதிகளில் தேர்தல் பணியாற்றி வருவதால் அருகே உள்ள குற்றாலம் - பழைய குற்றாலம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் தங்கி உள்ளார். இந்நிலையில் நேற்று மதியம் அவர் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த நிலையில் வருமான வரித்துறையினர் அவர் தங்கி இருந்த பழைய குற்றாலம் தனியார் விடுதிக்கு சென்றுள்ளனர். அவர் தங்கி இருந்த அறை பூட்டப்பட்டிருந்த நிலையில் உடனடியாக வருமான வரித்துறையினர் முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜனை அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அவரது அறைக்கு வருமாறு அழைத்துள்ளனர்.அதன்படி முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் உடனடியாக தான் தங்கி உள்ள அறைக்கு வந்துள்ளார்.

அப்போது அங்கு தயார் நிலையில் நின்று கொண்டிருந்த வருமான வரி துறையினர் முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் தங்கி இருந்த அறையில் அதிரடியாக சோதனைகள் நடத்தினார்கள் பிற்பகல் 3 மணிக்கு தொடங்கிய சோதனை இரவு 8:மணி வரை நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் தங்கியிருந்த அறையில் சோதனை நடைபெற்ற செய்தி அந்த பகுதியில் வேகமாக பரவியது.மேலும் அமைச்சர் சுரேஷ் ராஜனின் அறையில் பல லட்ச ரூபாய் கட்டுக்கட்டாக கைப்பற்றப்பட்டுள்ளதாவும் வதந்தி பரவியது. இதனால் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அந்த விடுதியில் முன்பு குவிந்தனர்.அப்போது அந்த தனியார் விடுதிக்குள் யாரும் அனுமதிக்கப் படவில்லை.

இந்நிலையில் இரவு 8 மணிக்கு சோதனையை முடித்துக் கொண்டு அந்தத் தனியார் விடுதியை விட்டு வெளியேறிய வருமான வரி துறையினர் எந்தத் தகவலும் தெரிவிக்கவில்லை.இந்தச் சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பாஜக தேசிய தலைவர் ஜே.பி. நட்டா தென்காசியில் தேர்தல் பிரச்சாரம்

**தென்காசி,ஏப்.17-**
பாஜக தேசிய தலைவர் ஜே.பி. நட்டா தென்காசி தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் பா.ஜ. க., தேசிய ஜனநாயக கூட்டணியை ஆதரித்து தாமரை சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தென்காசி நாடாளுமன்ற தொகுதியில் தமிழக மக்கள் முன்னேற்ற கழக தலைவர் ஜான் பாண்டியன் பா.ஜ. க., தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் சார்பில் தாமரை சின்னத்தில் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து தாமரை சின்னத்திற்கு வாக்குகள் கேட்டு அகில இந்திய பா.ஜ. க., தலைவர் ஜே.பி. நட்டா தென்காசியில் தேர்தல்பிரச்சாரம் மேற்கொண்டார்.

தென்காசி ஆசாத்நகர் தொடங்கி பழைய பேருந்து நிலையம் வரை ரோடு ஷோ நடத்தி பொதுமக்களிடம் தாமரை சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். திறந்த வேனில் நின்று கொண்டு கையசைத்தபடியே ஜே.பி. நட்டா ரோடு "ஷோ" நடத்தினார். அவருடன் தென்காசி பாராளுமன்ற தொகுதி வேட்பாளர் ஜான் பாண்டியன், பா.ஜ. க, மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜா, தென்காசி பாராளுமன்ற பொறுப்பாளர் மகாராஜன் உடனிருந்தனர். சாலையின் இருபுறமும் கூடியிருந்த பா.ஜ. க., கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் தாமரை சின்னத்திற்கு வாக்களித்து ஜான் பாண்டியனை வெற்றி பெறச் செய்யும்படி ஜே பி நட்டா கேட்டுக் கொண்டார்.

சாலையின் இருபுறமும் கூடியிருந்த பா.ஜ. க. , கூட்



டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடம் தாமரை சின்னத்திற்கு வாக்களித்து ஜான் பாண்டியனை வெற்றி பெறச் செய்யும்படி ஜே பி நட்டா கேட்டுக் கொண்டார்.

மேலும் அவர், பிரதமர் மோடி மூன்றாவது முறையாக பிரதமராக வருவதற்கு வாக்கு சேகரிக்க தென்காசிக்கு வந்துள்ளேன். பாருளாதார வளர்ச்சியில் 16வது இடத்தில் இருந்த நமது நாட்டை 5வது இடத்திற்கு பிரதமர் மோடி உயர்த்திக் காட்டினார். 3வது முறையாக 2024ல் மோடி பிரதமராக பொறுப்பேற்றால் பொருளாதார வளர்ச்சியில் உலக நாடுகளில் 3வது இடத்தில் இந்தியாவை இடம் பெறச்செய்வோர். நமது பாரதம் வளர்ச்சியடைந்த பாரதமாக வேண்டும். அதற்கு மோடி பிரதமராக வேண்டும். அதைபோல் தென்காசி தொகுதி பொருளாதாரத்தில் வளர்ச்சி பெற்ற தொகுதியாக மாற ஜான் பாண்டியனை வெற்றி பெறச் செய்யுங்கள். அவர் பாராளுமன்றம் சென்று தென்காசி தொகுதியின் தேவைகளை நிறைவேற்ற குரல் கொடுப்பார். அவர் குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும். காசி தமிழ் சங்கத்தை அமைத்த பிரதமர் மோடி, திருவள்ளுவர் பெயரில் பண்பாட்டு மையம் அமைக்கப்பட்டு தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக பிரதமர் மோடியின் அரசு இருக்கும் என்று ஜே.பி.நட்டா பேசினார்.

இந்நிகழ்ச்சியில் இணை அமைப்பாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட பொதுச் செயலாளர்கள்: பாலகுருநாதன் ராமநாதன் மாவட்ட பொருளாளர் பாலகிருஷ்ணன், மாநில செயற்குழு உறுப்பினர் ராமராஜா, மத்திய அரசு நலத்திட்ட பிரிவு மாநில செயலாளர் மருது பாண்டியன், தொழில் பிரிவு மாநிலச் செயலாளர் மகாதேவன், கூட்டுறவு பிரிவு மாநில செயலாளர் சிவநாதன், மாவட்டத் துணைத் தலைவர்கள் முத்துக்குமார், முத்துலட்சுமி, பால்ராஜ், ராதாகிருஷ்ணன், பாலஸ்ரீனிவாசன், மாவட்ட செயலாளர் சுப்பிரமணியன், புலிக்குட்டி, தென்காசி நகர தலைவர் மந்திரமூர்த்தி, நகர பார்வையாளர் ஆனந்தி முருகன், அமமுக மாவட்டச் செயலாளர்கள் வினோத் ராமச்சந்திரன்,கலந்து கொண்டனர்

# கீழப்பாவூரில் வேட்பாளர் ராபர்ட் புரூஸை ஆதரித்து திண்ணைப் பிரச்சாரம்



**தென்காசி,ஏப்.17-**
கீழப்பாவூரில் ஆலங்குளம் நாடாளுமன்ற இந்தியா கூட்டணி வேட்பாளர் இராபர்ட் புரூஸை ஆதரித்து தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தலைமை வகித்து கை சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க திண்ணைப் பிரச்சாரம் மேற்கொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் இந்தியா கூட்டணி வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியத்தில் வெற்றி பெற செய்ய பொதுமக்களை கேட்டுக் கொண்டார். உடன் மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் புவனேஸ்வரி , மாவட்ட பிரதிநிதி பொன் செல்வன் உட்பட கழக நிர்வாகிகள் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# தென்காசி மாவட்டத்தில் வாக்குப்பதிவு அலுவலர்களர்கள் பணி ஆணையை பெற்றுக்கொள்ளலாம்

## கலெக்டர் கமல் கிஷோர் தகவல்

**தென்காசி,ஏப்.17-**
தென்காசி மாவட்டத்தில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024. ஐ முன்னிட்டு தேர்தலில் பணிபுரிய உள்ள வாக்குப்பதிவு அலுவலர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி குறித்த பணி ஆணையினை பெற்றுக் கொள்ளலாம் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் அறிவிப்பு.

தென்காசி மாவட்டத்தில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024. ஐ முன்னிட்டு தென்காசி மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் பணிபுரியும் வகைக்கு 7470 வாக்குப்பதிவு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வாக்குப்பதிவு அலுவலர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடி குறித்த விபரத்தினை தெரிவிக்கும் பணி ஆணையினை நாளை (ஏப்.18) தாங்கள் கடைசியாக பயிற்சி பெற்ற மையங்களிலேயே பெற்றுக் கொள்ளலாம். சங்கரன்கோவில் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு சங்கரன்கோவில்ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், வாசுதேவநல்லூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு புளியங்குடி வீராச்சாமி செட்டியார் பொறியியல் கல்லூரியிலும், கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிக்கு கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்வியியல் கல்லூரியிலும், தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு தென்காசி எம்.கே.வி.கே மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியிலும், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியிலும், இராஜபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு இராஜபாளையம் பிஏசிஎம் ஆண்கள் மேல் நிலைப்பள்ளியிலும், ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு கலசலிங்கம் பல்கலைக்கழகத்திலும் நாளை (ஏப்.18) காலை 9.00 மணி முதல் பணி ஆணையினை பெற்றுக் கொண்டு உரிய நேரத்திற்குள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகளை சென்றடைந்திடவும், தேர்தல் பணியினை சிறந்த முறையில் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது என மாவட்டதேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்



கடையநல்லூர் நகராட்சி பகுதியில் 1 முதல் 33 வார்டுகளிலும் மாவட்ட அணிகளை பிரித்து வீடுகள் தோறும் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கும் பணியினை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே. ஜெயபாலன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் (சிபிஎஸ்இ) பள்ளியில் 10 வது பட்டமளிப்பு விழா




**தென்காசி,ஏப்.17-**
தென்காசி இசக்கி வித்யாஷ்ரம் சிபிஎஸ்இ பள்ளியில் மழலைகளுக்கான 10- வது பட்டமளிப்பு விழா மிகச்சிறப்பாக நடைப்பெற்றது. இந்நிகழ்ச்சியில் இசக்கி குழுமத்தின் நிர்வாகி அமிர்தா இசக்கித்துரை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். பட்டமளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினரான இசக்கி குழுமத்தின் நிர்வாகி அமிர்தா இசக்கித்துரையை பள்ளியின் முதல்வர் மோனிகா டீ சோசா, ஒருங்கிணைப்பாளர் அபிராமி மற்றும் ஆசிரியர்கள் பொன்னாடை அணிவித்து சிறப்பாக வரவேற்றனர். ஆசிரியை குழந்தைவேல்செல்வி, பள்ளியின் நிர்வாகி அமிர்தாஇசக்கித்துரை, பெற்றோர்களையும் வரவேற்று சிறப்புரையாற்றினார். ஆசிரியை ஐநூல் ஜன்னத் நன்றியுரை ஆற்றினார்.



ராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதி சுயேட்சை வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம் பிரச்சாரத்தின் போது கிருஷ்ணா தியேட்டர் பகுதியில் உள்ள டீக்கடையில் டீக்குடித்து பிரச்சாரம் செய்தார். உடன் எம்பிக்கள் தர்மர்,ரவீந்திரநாத் மற்றும் நிர்வாகிகள் இருந்தனர்.

# ராமநாதபுரம் தொகுதியில் பிரதமர் மோடி என்னை போட்டியிட வைத்துள்ளார்

## பரமக்குடி பிரச்சாரத்தில் முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் பேச்சு

**பரமக்குடி ஏப் 17 :**

பிரதமர் மோடி தான் இராமநாதபுரம் தொகுதியில் தன்னை போட்டியிட வைத்துள்ளார் என பரமக்குடியில் நடைபெற்ற பிரச்சாரத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மக்களவை தொகுதியில் பாஜக கூட்டணியின் சுயேச்சை வேட்பாளர் ஓ.பன்னீர் செல்வத்தை ஆதரித்து பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா பரமக்குடியில் 'ரோடு ஷோ' நடத்தினார். பின்னர் பரமக்குடி காந்தி சிலை முன்பு நடந்த பிரச்சாரத்தில் வேட்பாளர் ஓ.பன்னீர் செல்வம் பேசியதாவது,

ராமநாதபுரம் புண்ணிய பூமியில் பிரதமர் மோடி என்னை போட்டியிட வைத்துள்ளார். முதலில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தேசிய ஜனநாயக கூட்டணியில் தேசிய அளவிலும், தமிழகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஆனால் சுயேச்சையாக அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக்குழுவிலிருந்து என்னை ராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட வைத்துள்ளதற்கு பிரதமர் மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு பிரச்சாரம் செய்ய வந்த பாஜக தலைவர் நட்டாவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பிரதமர் மோடி 10 ஆண்டுகள் சிறப்பான ஆட்சி செய்துள்ளார். நாட்டில் பல்வேறு மொழி, கலாச்சாரத்தில் 140 கோடி மக்கள் வாழ்கின்றனர். உலகில் 200 நாட்டு தலைவர்கள் பங்கேற்ற மாநாட்டில் தலைசிறந்த நிர்வாகியாக மோடியை கூறியுள்ளனர்.

மூன்றாவது முறையாக மோடி பிரதமராக வருவதற்கான தேர்தல். இந்த தேர்தலில் நானும் வெற்றி பெற்று ராமநாதபுரம் தொகுதியில் நிரந்தரமாக குடியிருந்து மக்கள் பணியாற்றுவேன். இத்தொகுதியில் உள்ள குடிநீர் பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்படும். தொழில் வளம் மிகுந்த தொகுதியாக மாற்றுவேன். பிரதமர் மோடியிடம் எடுத்துச் சென்று, எல்லா வகையிலும், வளர்ச்சிடையந்த மாவட்டமாக மாற்றுவேன் என பேசினார்.

# அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களுக்கு மூடுவிழா கண்டதுதான் மு.க.ஸ்டாலினின் சாதனை

## வி.பி.பி.பரமசிவம் ஆவேச பேச்சு



**திண்டுக்கல் ஏப்ரல்:-17**

அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்களுக்கு மூடுவிழா கண்டது தான் ஸ்டாலின் ஆட்சியின் சாதனையாக உள்ளது எனவே நடைபெற உளள பாராளுமன்ற தேர்தலில் தக்க பாடம் புகட்ட தமிழக மக்கள் தயாராகி விட்டனர்.40 தொகுதிகளிலுமே அ.தி.மு.க. அமோக வெற்றியை பெரும் என கரூர் நாடாளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் தங்கவேலை ஆதரித்து மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி. பரமசிவம் பேசினார்.

கரூர் நாடாளுமன்ற தொகுதியின் அ.தி.மு.க. வேட்பாளர் தங்கவேலை ஆதரித்து வேடசந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட எரியோடு, கோவிலூர், குஜிலியம்பாறை, பாளையம் ஆகிய பகுதிகளில் கழக மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி. பி.பரமசிவம் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசுகையில்,

தி.மு.க. ஆட்சியில் மக்கள் மிகுந்த வேதனைக்கு உள்ளாகி உள்ளனர். எடப்பாடியாரின் ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்ட 2000 மினி கிளினிக்குகளை தி.மு.க. அரசு மூடிவிட்டது. தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதி உதவி திட்டத்தையும் தி.மு.க. அரசு நிறுத்தி விட்டது. இதே போல் அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட ஒரே காரணத்தினால் தான் தி.மு.க. அரசு மூடு விழா கண்டுள்ளது.

தேர்தலுக்கு முன்பாக கொடுத்த வாக்குறுதிகளில் 10 சதவீதம் கூட நிறைவேற்றவில்லை. மேலும் தமிழக மக்களுக்காக புதிய திட்டங்கள் எதையுமே செயல்படுத்தப்படவில்லை. நிலைமை இவ்வாறு இருக்க பல்லாயிரக்கணக்கான கோடி தமிழகத்தில் கடன் சுமை உருவாகி உள்ளது. மத்தியில் ஆளுகின்ற பா.ஜ.க. அரசும் தமிழகத்தை வஞ்சித்து வருகிறது. எனவே தி.மு.க.விற்கும் பா.ஜ.க.விற்கும் வரக்கூடிய பாராளுமன்ற தேர்தலில் தமிழக மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள். பாண்டிச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் அ.தி.மு.க. கூட்டணியே அமோக வெற்றியை பெறும். வேட்பாளர் தங்கவேல் பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்று பேசினார்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணன் கொட்டாம்பட்டி ஒன்றியத்துக்கு உட்பட்ட மணப்பச்சேரியில் பொதுமக்களிடம் இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார். அருகில் மேலூர் எம்.எல்.ஏ. பெரியபுள்ளான், முன்னாள் எம்.எல்.ஏ தமிழரசன், மாவட்ட அவை தலைவர் ராஜேந்திரன், கொட்டாம்பட்டி ஒன்றிய செயலாளர்கள் வெற்றிச்செழியன், குலோத்துங்கன், பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், மாவட்ட கவுன்சிலர்ராஜலட்சுமிஆனந்த்,ஒன்றியகவுன்சிலர்கள்கந்தசாமி,நயினான்,கொட்டாம்பட்டி நிர்வாகிகள் லெட்சுமணன், சேதுராமன், பொதியாடி, சதாசிவம், வெள்ளைச்சாமி, ராஜேந்திரன், மெய்யன், நகர் மன்ற உறுப்பினர் திவாகர், எஸ்டிபிஐ கட்சி, தேமுதிக உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆயுஷ் அறக்கட்டளை சார்பில் மகளிருக்கு இலவச பெட்டகம்



**வத்தலக்குண்டு ஏப்.17**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு, திண்டுக்கல், சமூக நலனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட இலாப நோக்கற்ற தொண்டு அமைப்பான ஆயுஷ் அறக்கட்டளை, பின்தங்கியவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான தனது உன்னதமான முயற்சியை அறிவித்துள்ளது.

நாகலக்ஷ்மி & C.P. முத்து நாராயணன் ஆகியோர் நினைவாக நிலக்கோட்டை சைல்டு வாய்ஸ் இணைந்து திண்டுக்கல், வத்தலகுண்டு பகுதிகளில் மாதவிடாய் சுகாதாரத்திற்கான சில உபகரணங்களை அடங்கிய மகளிர் பெட்டகம் வழங்க அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது.

ஒவ்வொரு குறிப்பிட்ட தொகுப்பிலும் மாதவிடாய் கோப்பை, ஸ்பைருலினா மாத்திரைகள், திரிபலா சூரணம், கைகளை சுத்தப்படுத்த சானிடைசர், வெந்நீர் ஒத்தடபை, பாடி வாஷ், கிரீன் டீ, நித்திய தூபம் மற்றும் மலைத்தேன் போன்ற அத்தியாவசிய பொருட்கள் அடங்கும். சமூகத்தில் உள்ள ஒவ்வொரு நபரின், குறிப்பாக பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்பவர்களின் நல்வாழ்வையும் கண்ணியத்தையும் உறுதி செய்வதில் ஆயுஷ் அறக்கட்டளையின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இந்த முயற்சி பிரதிபலிக்கிறது எனும் கருத்தை வலியுறுத்தி சங்கர் ஹரி அறக்கட்டளை, ஆயுஸ் பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் ஹரி கிருஷ்ணன், நிலக்கோட்டை சைல்டு வாய்ஸ் டிரஸ்ட் இயக்குனர் அண்ணாதுரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.

மகளிர் பெட்டகம் பெற்றுக்கொண்ட அனைத்து மகளிர்களும் ஆயுஷ் பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் ஹரி கிருஷ்ணன் நிலக்கோட்டை சைல்டு வாய்ஸ் இயக்குனர் அண்ணாதுரை ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்கள்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அகில பாரத அனுமன் சேனாவின் 19-வது ஆண்டு சீதா திருக்கல்யாணம்

## அருப்புக்கோட்டையில் நாளை நடக்கிறது

**மதுரை, ஏப் 17-**

அகில பாரத அனுமன் சேனாவின் 19-வது ஆண்டு சீதா திருக்கல்யாணம் அருப்புக்கோட்டை பட்டாபிராமர் கோவிலில் நாளை 18-ம் தேதி இரவு 7 மணிக்கு மேல் திருக்கல்யாண மண்டபத்தில் நடக்கிறது.

அருள்மிகு ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி, ஜானகி பிராட்டியாரின் திருக்கல்யாண விழா தெய்வத்திரு டாக்டர் பி.ஆர். தினகரன் (ராமலிங்கா மில்ஸ்) அருளாசியுடன் நடைபெறுகிறது. இந்த விழாவில் கோவில் செயல் அலுவலர் ராமதிலகம், மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவில் தக்கார் கோ. தேவி, இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் சி. சந்திரமோகன், தமிழ்நாடு அரசு மற்றும் திருக்கோவில் பணியாளர்கள், பட்டாபிராமர் திருக்கோவில் அகில பாரத அனுமன் சேனா தேசிய தலைவர் ஸ்ரீமான் எஸ்.வி. ஸ்ரீதரன்ஜி, அகில பாரத அனுமன் சேனா செயல் தலைவர் கே. சங்கர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொள்கிறார்கள். இரவு 8 மணிக்கு திருக்கல்யாண அன்னதானம் நடைபெறுகிறது. இந்த தகவலை அகில பாரத அனுமன் சேனா மாநில செயல் தலைவர் கே. சங்கர் தெரிவித்துள்ளார்.

# ஜோஷ் டாக்ஸ் சிட்டி சாம்பியன்ஸ் 2024- ஐ அறிமுகப்படுத்தினார்

**சென்னை, ஏப் 17-**

ஜோஷ் டாக்ஸ், ஒரு பிராந்திய உள்ளடக்கம் மற்றும் மேம்பாட்டிற்கான தளமான சிட்டி சாம்பியன்ஸ் 2024க்கான தொடக்கத்தை அறிவித்தது. 2023 இல் அதன் தொடக்க வெளியீட்டில் இருந்து, சிட்டி சாம்பியன்ஸ் நிலையான நகர்ப்புற மேம்பாட்டிற்காக உழைக்கும் நிறுவனங்களை அடையாளம் காணவும், வெற்றி பெறவும், ஆதரவளிக்கவும் அர்ப்பணித்துள்ளது.

இந்த ஆண்டு நிகழ்ச்சிக்கான தனது உற்சாகத்தை வெளிப்படுத்திய ஜோஷ் டாக்ஸ் நிறுவனத்தின் CEO & இணை நிறுவனர் சுப்ரியா பால் கூறுகையில், சிட்டி சாம்பியன்ஸ் கடந்த ஆண்டு 121 நகரங்களில் 3 மில்லியனுக்கும் அதிகமான மக்களைச் சென்றடைந்தது, மேலும் இந்த ஆண்டு அதிகமான மக்களைச் சென்றடையும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்த முயற்சி அனைத்து குடிமக்களுக்கும் வாழக்கூடிய, நிலையான மற்றும் பாதுகாப்பான நகரங்களை உருவாக்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கு ஒரு சான்றாகும்.

மூலோபாய வழிகாட்டுதல், நெட்வொர்க்கிங் வாய்ப்புகள் மற்றும் நிதியுதவிக்கான அணுகலை வழங்குவதன் மூலம், இந்த திட்டம் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார். ஐஐஎம் கல்கத்தா இன்னோவேஷன் பார்க் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் சுப்ரங்ஷு சன்யால் மேலும் கூறினார்.

# செக்மென்ட்டிலேயே பெர்ஃபார்மென்ஸ் மற்றும் டிஸ்பிளேயில் சிறந்த ப்ளேயரை ரியல்மி நிறுவனம் வெளியிட்டுள்ளது

**மதுரை, ஏப் 17-**

இந்தியாவின் மிகவும் நம்பகமான ஸ்மார்ட்போன் சேவை வழங்குநரான ரியல்மி நிறுவனம், அதன் சமீபத்திய ரியல்மி P சீரிஸ் 5G ஸ்மார்ட்போன்களான ரியல்மி P1 ப்ரோ 5ஜி மற்றும் ரியல்மி பி1 5ஜி போன்களை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த இரண்டு அதிநவீன ஸ்மார்ட்போன்களும் அவற்றின் சிறந்த பெர்ஃபார்மென்ஸ், அபாரமான யூஸர் எக்ஸ்பீரியன்ஸ் மற்றும் இந்திய வாடிக்கையாளர்களுக்கென பிரத்யேகமாக பிளிப்கார்ட்டில் விற்பனை செய்யப்படுதல் ஆகியவற்றின் மூலம் மிட்-ரேஞ் ஸ்மார்ட்போன் செக்மெண்ட்டில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த தயாராக உள்ளன.

புதிய P சீரிஸ் உடன், ரியல்மி அதன் ரியல்மி பேட் 2 - வைஃபை வேரியண்ட், மற்றும் ரியல்மி டி110 பட்ஸையும் அறிமுகப்படுத்தும். இதன் அறிமுகம் குறித்து, ரியல்மி நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ஸ்மார்ட்போன் தொழிற்துறையில் பெர்ஃபார்மென்ஸ் தராதரங்களை மாற்றியமைக்க தயாரிக்கப்பட்டுள்ள ரியல்மி பி சீரிஸ் 5ஜி ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் என்று கூறினார்.

# பந்தல்குடி சுற்றுவட்டார பகுதிகளில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மாணிக்கம்தாகூர் வாக்கு சேகரிப்பு



**அருப்புக்கோட்டை. ஏப்.17.**

விருதுநகர் பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அதன்படி அருப்புக்கோட்டை அருகே பந்தல்குடி சுற்று வட்டார பகுதிகளான லிங்காபுரம், அழகாபுரி, போடுரெட்டிபட்டி, பூசாரி பட்டி, சூரநாயக்கன்பட்டி, மேட்டுப்பட்டி, சின்னாஞ்செட்டிபட்டி, கொப்புசித்தம்பட்டி, ஆண்டிபட்டி, பெரியதும்மகுண்டு, சின்னதும்மகுண்டு மற்றும் காசிலிங்காபுரம் மற்றும் அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியான நெசவாளர் காலனி, பாண்டியன் திடல், எம் டி ஆர் நகர், உச்சி சாமி கோவில் தெரு, காந்தி நகர் மேம்பாலம் பகுதிகளில் ஆகிய பகுதிகளில் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் உடன் இணைந்து திறந்த ஜீப்பில் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது பேசிய அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், விலைவாசி குறைய வேண்டும் என்றால் கை சின்னம் ஜெயிக்க வேண்டும். 10 ஆண்டுகளாக மோடி ஆட்சியில் விலைவாசி கூடிக் கொண்டே உள்ளது. விலைவாசி தினசரி கூடிக் கொண்டே உள்ளது. மேலே காங்கிரஸ் அமைந்து ராகுல் காந்தி பிரதமர் ஆனால் மட்டுமே விலைவாசி குறையும். என கூறி வாக்கு சேகரித்தார்.

பிரச்சாரத்தின் போது அருப்புக்கோட்டை முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ் நகர மன்ற தலைவர் சுந்தர் லட்சுமி ,முன்னாள் நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம், துணைத் தலைவர் பழனிச்சாமி, நகர கழகச் செயலாளர் ஏ கே மணி ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ், கவுன்சிலர் ஜோதி ராமலிங்கம் ,நாகநாதன் ட்விங்கிளின் ஞானபிரபா, இளங்கோ, சங்கர் ராஜ் மற்றும் திமுக காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து பெத்தானியாபுரம் பகுதியில் இரட்டை இலை சின்னத்துக்கு வாக்கு சேகரிக்க வந்த முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ, வேட்பாளர் டாக்டர் சரவணன் ஆகியோருக்கு 63-வது வட்டக் கழக பொருளாளர் மற்றும் மதுரை மண்டல அண்ணா தொழிற்சங்க துணைச் செயலாளர் பி.ஆர்.சி திருமுருகன் ஆளுயர மாலை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளித்தார்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து மேற்கு தொகுதி முடக்குசாலையில் திறந்த ஜீப்பில் தீவிரபிரச்சாரம் மேற்கொண்ட முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ.விற்கு மீனாட்சி அம்மன் வேடம் அணிந்து அ.தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# கோவையில் அண்ணாமலை டெபாசிட் இழப்பது உறுதி

## அ.தி.மு.க., மருத்துவரணி மாநில துணை செயலாளர் தாக்கு

**மதுரை, ஏப் 17-**

மதுரை லோக்சபா தொகுதி அ.தி.மு.க., வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து டாக்டர்கள் மத்தியில் அ.தி.மு.க., மருத்துவர் அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் விஜயபாண்டியன் ஆதரவு திரட்டினார். பின்னர் அவர் கூறியதாவது :



பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை லோக்சபா தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.க.,இருக்காது என கூறுகிறார். ஆனால் தன்னை தோற்கடிக்க அ.தி.மு.க., தி.மு.க., கைகோர்த்து உள்ளதாக கூறியதன் மூலம் தான் தோற்கப் போகிறோம் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். தமிழகத்தில் தி.மு.க.,வை எதிர்த்து அ.தி.மு.க., களம் கண்டு வருகிறது. மக்கள் விரோத தமிழக தி.மு.க., அரசுக்கு எதிராகவும், மத்திய பா.ஜ., அரசுக்கு எதிராகவும் மக்கள் கடும் கோபத்தில் உள்ளதுடன், வரும் தேர்தலில் அ.தி.மு.க.,வை வெற்றி பெறச் செய்ய தயாராகி விட்டனர். முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க., பொதுச்செயலாளர் எடப்பாடி யார் செல்லும் இடங்களில் எல்லாம் கூடும் பல்லாயிரக்கணக்கான மக்களின் எண்ணிக்கை இதை உறுதிப்படுத்துகிறது. இதை பொறுக்க முடியாத அண்ணாமலை, முதல்வர் ஸ்டாலின் பொய்யான குற்றச்சாட்டுகளை கற்பனையில் கூறி வருகின்றனர். இவ்வாறு அ.தி.மு.க., மருத்துவர் அணி மாநில துணைச் செயலாளர் டாக்டர் விஜயபாண்டியன் கூறினார்.

ஐ.பி.எல். போட்டிகளில்

# முக்கிய மைல்கல்லை எட்டிய டோனி, ருதுராஜ் கெய்க்வாட்



**சென்னை, ஏப். 17-**

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் ஐபிஎல் தொடரில் வேகமாக 2 ஆயிரம் ரன்களைக் கடந்து அசத்தியுள்ளார். அதேபோல் சி.எஸ்.கே.வுக்காக 5 ஆயிரம் ரன்களைக் கடந்து எம்.எஸ்.டோனி சாதனை படைத்துள்ளார்.

**விரைவாக ரன்கள்...**

ஐபிஎல் தொடரில் நடைபெற்ற போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸை 20 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அசத்தியது. இந்தப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் 40 பந்துகளில் 69 ரன்கள் குவித்து அசத்தினார். அதில் 5 பவுண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்கள் அடங்கும். இந்தப் போட்டியில் 69 ரன்கள் எடுத்ததன் மூலம் ஐபிஎல் தொடரில் வேகமாக 2 ஆயிரம் ரன்களைக் கடந்த வீரர்களில் ஒருவராக அவர் இணைந்துள்ளார். ருதுராஜ் கெய்க்வாட் 57 இன்னிங்ஸ்களில் 2 ஆயிரம் ரன்களைக் கடந்துள்ளார்.

**5 ஆயிரம் ரன்கள்...**

அதேபோல 20-வது ஓவரில் களமிறங்கிய எம்.எஸ்.டோனி, ஹார்திக் பாண்டியாவின் பந்துவீச்சில் ஹாட்ரிக் சிக்ஸர்களை பறக்கவிட்டு அசத்தினார். அதிரடியாக விளையாடிய அவர் 4 பந்துகளில் 20 ரன்கள் எடுத்து கடைசி வரை களத்தில் இருந்தார். மும்பைக்கு எதிரான இந்தப் போட்டியில் 20 ரன்கள் எடுத்ததன் மூலம் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக 5 ஆயிரம் ரன்கள் குவித்த இரண்டாவது வீரராக அவர் மாறினார். இதுவரை சிஎஸ்கேவுக்காக 250 போட்டிகளில் விளையாடியுள்ள எம்.எஸ்.டோனி 5016 ரன்கள் குவித்துள்ளார். 5529 ரன்கள் எடுத்து சிஎஸ்கேவுக்காக அதிக ரன்கள் எடுத்த வீரராக சுரேஷ் ரெய்னா முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

**2 ஆயிரம் ரன்களை கடந்த வீரர்கள்:**

1) கிறிஸ் கெயில் - 48 இன்னிங்ஸ்கள்.
2) ஷான் மார்ஷ் - 52 இன்னிங்ஸ்கள்.
3) ருதுராஜ் கெய்க்வாட் - 57 இன்னிங்ஸ்கள்.
4) கே.எல்.ராகுல் - 60 இன்னிங்ஸ்கள்.
5) சச்சின் டெண்டுல்கர் - 63 இன்னிங்ஸ்கள்.

வங்காளதேசத்திற்கு எதிரான தொடர்:

# இந்திய மகளிர் டி-20 அணி அறிவிப்பு

**புதுடெல்லி, ஏப். 17-**

வங்காளதேசத்திற்கு எதிரான டி-20 தொடருக்கான இந்திய மகளிர் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஹர்மன்ப்ரீத் கவுர்...**

இந்திய கிரிக்கெட் அணி வங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆட உள்ளது. இந்த தொடர் வரும் 28ம் தேதி தொடங்குகிறது. இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு ஹர்மன்ப்ரீத் கவுர் கேப்டனாகவும், ஸ்மிருதி மந்தனா துணை கேப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**போட்டி அட்டவணை:**

1) முதல் டி20 போட்டி - ஏப்ரல் 28 - சில்ஹெட்.
2) 2வது டி20 போட்டி - ஏப்ரல் 30 - சில்ஹெட்.
3) 3வது டி20 போட்டி - மே 2 - சில்ஹெட்.
4) 4வது டி20 போட்டி - மே 6 - சில்ஹெட்.
5) 5வது டி20 போட்டி - மே 9 - சில்ஹெட்.

**இந்திய பெண்கள் அணி:**

ஹர்மன்ப்ரீத் கவுர் (கேப்டன்), ஸ்மிருதி மந்தனா (துணை கேப்டன்), ஷபாலி வர்மா, தயாளன் ஹேமலதா, சஜனா சஜீவன், ரிச்சா ஹோஷ் (விக்கெட் கீப்பர்), யாஸ்திகா பாட்டியா (விக்கெட் கீப்பர்), ராதா யாதவ், தீப்தி சர்மா, பூஜா வஸ்த்ரகர், அமஞ்சோத் கவுர், ஸ்ரேயங்கா பட்டீல், சைகா இஷாக், ஆஷா ஷோபனா, ரேனுகா சிங் தாக்கூர், டைட்டஸ் சாது.

பெங்களூருவை வீழத்தி

# ஐதராபாத் ஹாட்ரிக் வெற்றி



**ஐதராபாத், ஏப். 17-**

ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி வெற்றி பெற்றதுடன், 287 ரன்கள் விளாசி மீண்டும் புதிய சாதனையை படைத்துள்ளது. இந்த போட்டியில் பெங்களூருவை வீழ்த்தி ஐதராபாத் ஹாட்ரிக் வெற்றி பெற்றுள்ளது.

**30-வது லீக் ஆட்டம்...**

17வது ஐபிஎல் கிரிக்கெட் திருவிழா மார்ச் 22-ம் தேதி சென்னையில் தொடங்கி மே 26-ம் தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது. இதில், சென்னை, பெங்களூரு, மும்பை, கொல்கத்தா, ஐதராபாத், டெல்லி, பஞ்சாப், குஜராத், லக்னோ, ராஜஸ்தான் ஆகிய 10 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன. அந்த வகையில் 30-வது லீக் ஆட்டம் (ஏப். 15) பெங்களூரு சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியும், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் மோதின. இதில் டாஸ் வென்ற ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. ஐதராபாத் அணியின் தொடக்க வீரர்களாக அபிஷேக் சர்மா, டிராவிஸ் ஹெட் களமிறங்கினர்.

**39 பந்துகளில் சதம்...**

அபிஷேக் சர்மா 34 ரன்களில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஹெண்ட்ரிச் கிளாசனுடன் ஜோடி சேர்ந்த டிராவிஸ் ஹெட் பெங்களூரு சிறப்பாக ஆடினார். அவர் 39 பந்துகளில் சதம் அடித்தார். ஹெண்ட்ரிச் கிளாசன் 67 ரன்கள் குவித்த நிலையில் கேட்ச் மூலம் அவுட் ஆனார். இவர்களை அடுத்து மார்க்ரம், அப்துல் சமத் களமிறங்கினர். 20 ஓவர்கள் முடிவில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 287 ரன்கள் குவித்தது.

**288 ரன்கள் இலக்கு...**

இதையடுத்து, 288 எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி களமிறங்கியது. அதிரடியாக விளையாடிய ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 262 ரன்கள் எடுத்தது. அனுஜ் ரவாத் 25 ரன்களுடனும், வைசாக் 1 ரன்னுடனும் களத்தில் இருந்தனர். அதிகபட்சமாக தினேஷ் கார்த்திக் 35 பந்துகளுடன் 83 ரன்களை விளாசினார். ஃபாஃப் டு பிளெசிஸ் 28 பந்துகளில் 62 ரன்கள் எடுத்தார். மேலும், விராட் கோலி 20 பந்துகளில் 42 ரன்கள் எடுத்தார். இந்நிலையில், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்கு எதிரான லீக் போட்டியில் 25 ரன்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி வெற்றி பெற்றது.

**கம்மின்ஸ் பேட்டி....**

வெற்றி பெற்ற பின் ஐதராபாத் கேப்டன் பேட் கம்மின்ஸ் அளித்த பேட்டியில் கூறியதாவது, இந்த போட்டியை பொறுத்தவரை நான் ஒரு பேட்ஸ்மேனாக இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். அந்த அளவிற்கு பேட்ஸ்மேன்களின் ஆதிக்கம் இருந்தது. உண்மையிலேயே இந்த போட்டி பார்ப்பதற்கு அருமையாக இருந்தது. இது போன்ற போட்டிகளில் சிறப்பான செயல்பாடுகள் வெளிவரும். உண்மையிலேயே இந்த மைதானத்தின் தன்மையை அறிய வேண்டுமெனில் ஒரு பவுலர் 7 முதல் 8 ஓவர் வரை வீசினால் மட்டுமே மைதானத்தின் தன்மையை கணித்து போட்டியில் நமது திறனை வெளிப்படுத்த முடியும். இவ்வாறு அவர் கூறினார்.

**டு பிளெஸ்சிஸ் பேட்டி...**

பெங்களூரு கேப்டன் டு பிளெஸ்சிஸ் அளித்த பேட்டியில் கூறியதாவது, உண்மையிலேயே இந்த போட்டியில் எங்களது பேட்ஸ்மேன்கள் சிறப்பான ஆட்டத்தையே வெளிப்படுத்தினர். டி20 கிரிக்கெட்டுக்கு ஏற்ற மைதானமாக இந்த மைதானம் இருந்தது. கடைசி வரை இலக்கிற்கு நெருக்கமாக செல்ல வேண்டும் என்று நினைத்தே விளையாடினோம். ஆனால் 280 ரன்கள் என்பது மிகப்பெரிய இலக்கு. அது எட்டுவதற்கு கடினமான ஒன்று. இருந்தாலும் நாங்கள் நிறைய விசயங்களை இந்த போட்டியில் முயற்சி செய்தோம். அந்த முயற்சிகள் பலன் அளித்துள்ளன. இந்த போட்டியில் வேகப்பந்து வீச்சாளர்கள் பந்துவீசுவதில் மிக சிரமத்தை சந்தித்தனர். ஏனெனில் பேட்ஸ்மேன்கள் ஆதிக்கம் செலுத்தும்போது பந்துவீச்சாளர்களின் சமநிலை தவறியது. இந்த போட்டியில் 30 முதல் 40 ரன்கள் வரை நாங்கள் அதிகமாக வழங்கி விட்டோம். அதுவே தோல்விக்கு காரணமாகவும் அமைந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஐ.பி.எல்.லில் புதிய சாதனை

முன்னதாக நடப்பு மார்ச் 27-ம் தேதி நடைபெற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 3 விக்கெட் இழப்புக்கு 277 ரன்களை குவித்து சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி அதிகபட்ச ஐபிஎல் ஸ்கோர் சாதனையை படைத்திருந்தது. தற்போது தனது ரெக்கார்டை தானே முறியடித்து நேற்றைய ஆட்டத்தில் 287 ரன்கள் எடுத்து ஐபிஎல் வரலாற்றில் அதிகபட்ச ஸ்கோர் எடுத்த அணி என்ற சாதனையை படைத்துள்ளது சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி.

## மேக்ஸ்வெல் திடீர் விலகல்

ஐதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் மேக்ஸ்வெல் விளையாடவில்லை. கட்டை விரல் காயம் காரணமாக நேற்று அவர் ஆடவில்லை என்றே நம்பப்பட்டது. ஆனால், தனக்கு பிரேக் தேவைப்படுவதாக டு பிளெசிஸிடம் கேட்டதாக மேக்ஸ்வெல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மேக்ஸ்வெல் கூறியதாவது:- "நான் கடந்த போட்டி முடிந்தவுடனேயே நேராக டு பிளெசிஸிடமும் பயிற்சியாளர்களிடமும் சென்று எனக்கு பதில் வேறு வீரரை ஆடவைப்பதற்கான தருணம் இது என்றேன். எனக்கு கடந்த காலத்திலும் இப்படி நடந்துள்ளது.

எனவே, எனக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் இடைவேளை தேவை என்பதை உணர்ந்தேன். மீண்டும் இந்த ஐபிஎல் தொடரில் வாய்ப்புக் கிடைக்குமானால் அதற்குள் நான் என் உடல் மற்றும் மன நிலையை திடப்படுத்திக் கொள்வேன்" என்று கூறியுள்ளார். மேக்ஸ்வெல் இப்படி கூறியிருப்பதால் அடுத்து வரும் போட்டிகளில் அவர் ஓய்வில் இருக்கப்போவது உறுதியாகியுள்ளது. மேலும், 35-வயதான மேக்ஸ்வெல்லுக்கு இதுவே கடைசி ஐபிஎல் தொடராகக் கூட இருக்கலாம் என்று சொல்லப்படுவதால் அவரது ரசிகர்கள் கவலை அடைந்துள்ளனர்.

## பெங்களூரு மோசமான சாதனை

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு - சன்ரைசர்ஸ் ஐதரபாத் மோதின. இந்த ஆட்டத்தில் பெங்களூரு அணியின் பந்துவீச்சை ஐதராபாத் அணியை சேர்ந்த பேட்ஸ்மேன்கள் அனைவரும் 20 ஓவர்கள் வரை விடாது வெளுத்து வாங்கினர். சிறப்பாக பந்துவீசினார் என்று ஒருவரை கூட சொல்ல முடியாத அளவுக்கு அனைவரும் எதிரணிக்கு ரன்களை வாரி வழங்கும் வள்ளலாகவே திகழ்ந்தனர்.

அத்துடன் 20 ஓவர் கிரிக்கெட்டில் பந்துவீச்சில் மோசமான சாதனை ஒன்றையும் தன்வசப்படுத்தியுள்ளனர். அதாவது, பெங்களூரு அணியில் வேகப்பந்து வீச்சாளர்கள் டாப்லே (68 ரன்), யாஷ் தயாள் (51 ரன்), பெர்குசன் (52 ரன்), விஜய்குமார் வைசாக் (64 ரன்) ஆகியோர் ரன்களை விட்டுக்கொடுத்துள்ளனர். 20 ஓவர் போட்டிகளில் ஒரு இன்னிங்சில் 4 பவுலர்கள் 50 ரன்களுக்கு மேல் விட்டுக்கொடுத்தது இதுவே முதல் முறையாகும்.

## ஆர்.சி.பி. பயிற்சியாளர் கருத்து

ஐபிஎல் தொடரில் இனி விளையாடும் ஒவ்வொரு போட்டியும் எங்களுக்கு அரையிறுதியைப் போன்றது என ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் பயிற்சியாளர் ஆண்டி ஃபிளவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பேசியதாவது: இனிவரும் ஒவ்வொரு போட்டியும் எங்களுக்கு அரையிறுதியைப் போன்றது.

ஆனால், போட்டியில் மிகுந்த வலிமையோடு எப்படி திரும்ப வருவது என்பது குறித்து நாங்கள் சிந்திக்க வேண்டும். சன் ரைசர்ஸுக்கு எதிரான போட்டி எங்களுக்கு கடுமையாக அமைந்தது. தினேஷ் கார்த்திக் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் என்றார். ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு வருகிற ஏப்ரல் 21 ஆம் தேதி தனது அடுத்தப் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கது.

## மும்பை அணிக்கு அறிவுரை

நடப்பு ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்கு எதிராக கடந்த 14ம் தேதி சொந்த மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முப்பை அணி தோல்வியை தழுவியது. அந்த அணியில் பும்ராவை தவிர மற்ற பந்துவீச்சாளர்கள் சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் மும்பை அணியின் பந்துவீச்சு துறை குறித்து பேசியுள்ள வெஸ்ட் இண்டீஸ் முன்னாள் வீரர் பிரையன் லாரா கூறியதாவது, நாம் மும்பை இந்தியன்ஸ் அணியை பார்க்க வேண்டும். இங்கே பலரும் அவர்களை கோப்பையை வெல்லக்கூடிய அணியாக வைத்திருக்கின்றனர். அதற்கான காரணம் என்னவெனில் அவர்கள் நன்றாக பேட்டிங் செய்கின்றனர். கடந்த 2 போட்டியில் 230 ரன்கள் அடித்த அவர்கள் 196 ரன்களை வெறும் 15 ஓவரில் சேசிங் செய்து மிகவும் எளிதாக வென்றனர்.

அதனால் இந்த போட்டியில் (சென்னைக்கு எதிராக) அவர்கள் வெல்வார்கள் என்று நாம் கணித்தோம். ஆனால் அவர்களுடைய பவுலிங் சுமாராக உள்ளது. பும்ராவை தவிர்த்து இந்த பவுலிங் கூட்டணியில் யாருமே அவர்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லை. அதை சி.எஸ்.கே பேட்ஸ்மேன்கள் எடுத்துக்கொண்டனர். சில டாட் பந்துகளை வீசி மும்பை அழுத்தும் கொடுக்கும் என்று நாம் நினைத்தோம். ஆனால் அவர்கள் அதை செய்யவில்லை. பாண்ட்யாவுக்கு மோசமான போட்டியாக அமைந்தது. கடைசிக்கட்ட ஓவர்களில் பந்து வீசிய அவருக்கு எதிராக (தோனி) மாஸ்டர் 3 சிக்ஸர்கள் அடித்தார். எனவே மும்பை வெற்றி பெறுவதற்கு 2 - 3 மேட்ச் வின்னிங் பவுலர்களை கண்டறிய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பல்லடம் அருகே ஒரே குடும்பத்தை சேர்ந்த

# 4 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் 4 பேருக்கு 4 ஆயுள்

**திருப்பூர், ஏப். 17-**

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே வீட்டிற்கு அருகில் மது அருந்தியவர்களை தட்டிக் கேட்டதற்காக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் வெட்டி படுகொலை செய்யப்பட்ட வழக்கில் நான்கு பேருக்கு நான்கு ஆயுள் தண்டனையும் ஒருவருக்கு ஆறு ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அடுத்த கள்ளக்கிணறு பகுதியில் செந்தில்குமார் என்பவர் வசித்து வந்தார். இவரிடம் வெங்கடேசன் என்பவர் ஓட்டுநராக பணிபுரிந்து வந்துள்ளார். குடியிருப்பு பகுதியில் வெங்கடேசன் மது அருந்தியதாகவும் அதை, செந்தில்குமாரின் உறவினரும் பாஜக பிரமுகருமான மோகன்ராஜ் உள்ளிட்டோர் தட்டிக் கேட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் செந்தில்குமார், அவருடைய உறவினர்கள் மோகன்ராஜ், புஷ்பவதி, ரத்தினாம்பாள் ஆகிய நான்கு பேரும் 3 பேர் கொண்ட கும்பலால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் வெங்கடேசன் உள்ளிட்ட மூவர் கொலை செய்துவிட்டு தப்பியதாக கூறப்படுகிறது. தகவல் அறிந்ததும், கோவை மேற்கு மண்டல ஐஜி பவானீஸ்வரி தலைமையிலான காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு நடத்தினர். அதன் பின்னர், கொலை செய்தவர்களை கைது செய்து குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்தனர்.

இதில் விசாரணையின் போது தப்பிக்க முயன்றதாக வெங்கடேஷ் என்பவரை போலீசார் கால் முட்டியில் சுட்டு பிடித்தனர். பின்னர் இவருக்கு கோவையில் அரசு மருத்துவமனையில் போலீஸ் பாதுகாப்போடு சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர்,இந்த வழக்கை விசாரித்த காவல்துறையினர் 800 பக்கத்திற்கு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் திருப்பூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கள்ளக்கிணறு கொலை வழக்கில் நீதிபதி சொர்ணம் நடராஜன் தீர்ப்பு வழங்கினார். இதில், ராஜ்குமார், செல்லமுத்து, சோனை முத்தையா மற்றும் அய்யப்பன் ஆகியோருக்கு தலா 4 ஆயுள் தண்டனைகளும் ரூ.1000 அபராதமும் விதிக்கப்பட்டது. குற்றவாளிகளுக்கு அடைக்கலம் வழங்கிய 5 வது குற்றவாளி வெங்கடேஷ்க்கு இரண்டு 3 ஆண்டுகள் தண்டனை மற்றும் ரூ.2000 அபராதம் விதித்து நீதிபதி சொர்ணம் நடராஜன் தீர்ப்பு வழங்கினார்.

# தமிழகத்தில் பா.ஜ.க. ஜெயிக்கும் என பிரதமரை ஏமாற்றியுள்ளனர்

**காஞ்சிபுரம் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு**

**சென்னை, ஏப். 17-**

தமிழகத்தில் பா.ஜ.க. ஜெயிக்கும் என பிரதமரை யாரோ ஏமாற்றியுள்ளனர் என காஞ்சிபுரம் பிரசாரக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

காஞ்சிபுரம் கரசங்கால் பகுதியில் ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:- எல்லோருக்கும் எல்லாம், அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சி என்பதே திராவிட மாடல் அரசின் நோக்கம்.சட்டப்பேரவை தேர்தல் வாக்குறுதியாக அளிக்கப்படாத, நான் முதல்வன் திட்டத்தால் ஏராளமான மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர். பல ஆயிரம் மாணவர்களின் கனவுகள், நிஜமாக மாறியுள்ளது.

இன்னொரு தேர்தல் வாக்குறுதி அல்லாத திட்டம் தான் காலை உணவுத் திட்டம். சுமார் 16 லட்சம் மாணவர்கள் இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளனர். "நான் மத்திய அரசிடம் விருது வாங்கியுள்ளேன். நீங்கள் ஏதாவது விருது வாங்கினீர்களா? என எடப்பாடி பழனிசாமி நம்மிடம் கேட்கிறார். 'நமக்கு வாய்த்த அடிமைகள் மிகவும் திறமைசாலிகள்' என்ற படத்திற்கேற்ப, பா.ஜ.க. அரசு உங்களுக்கு விருது வழங்கியிருக்கும். பா.ஜ.க.வை ஆதரிக்க மாட்டோம் என்று இன்றுவரை பழனிசாமியால் திட்டவட்டமாக கூறமுடியவில்லை. பா.ஜ.க.விடம் இருந்து விலகி விட்டதாக எடப்பாடி பழனிசாமி நாடகமாடுகிறார். அ.தி.மு.க. அரசுக்கு விருது கொடுத்தது மத்திய அரசுக்கு அடிமையாக இருந்ததற்குதான்.

பதவி சுகத்திற்காக தமிழக நலனை மத்திய அரசிடம் அடகு வைத்திருந்த அ.தி.மு.க.அரசு நெம்பர் 1. பழனிசாமி அவர்களே நாங்கள் மக்களிடம் விருது வாங்கியுள்ளோம். அது எல்லாவற்றையும் விட பெரியது. இன்னொரு விருது, ஜூன் 4ம் தேதி 40க்கு 40 என்ற விருது கிடைக்கும் பழனிசாமி அவர்களே வெய்ட் அண்ட் சி.

ஜவுளி ஏற்றுமதியில் நம்பர் 1, ரெடிமேட் ஏற்றுமதியில் நம்பர் 1, தோல் பொருள் ஏற்றுமதியில் நம்பர் 1, ஏற்றுமதி ஆயத்த நிலைக் குறியீட்டில் நம்பர் 1, எலக்ட்ரானிக்ஸ் ஏற்றுமதியில் நம்பர் 1, கர்ப்பிணி சுகாதாரக் குறியீட்டில் நம்பர் 1, மகப்பேறுக்கு பிந்தைய கவனிப்பில் நம்பர் 1, 50 சிறப்பு பொருளாதார மண்டலங்களுடன் நாட்டிலேயே நம்பர் 1அனைத்து சமூக, பொருளாதாரக்குறியீடுகளிலும் தமிழகம் முன்னிலையில் உள்ளது.

பழனிசாமி அவர்களே இதெல்லாமே நாங்கள் சொன்னவை அல்ல, மத்திய அரசின் புள்ளி விபரங்கள். அ.தி.மு.க. ஆட்சியில் தொழில் செய்ய உகந்த மாநிலங்கள் தரவரிசையில் 14வது இடத்தில் இருந்த தமிழ்நாட்டை, தி.மு.க. ஆட்சியமைந்ததும் மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றியுள்ளோம். சாதிவாரி கணக்கெடுப்பு, ஜி.எஸ்.டி.,க்கு பதில் புதிய சட்டம் போன்றவை தேர்தல் அறிக்கையில் உள்ளன. மக்களவைத்தேர்தலில் இந்தியா கூட்டணியின் தேர்தல் அறிக்கைதான் கதாநாயகன்.

முதல்வராக இருந்த மோடிக்கு பிரதமரானதும் மாநிலங்களைக் கண்டாலே பிடிக்கவில்லை. மோடி ஆட்சியில் மக்கள் வாழ்வதே போராட்டமாக இருக்கிறது. மிகவும் மலிவான பிரிவினைவாத அரசியல் செய்து வருகிறார். தி.மு.க.,வுக்கு தமிழ்நாட்டில் எதிர்ப்பலை வீசுவதாக பிரதமர் மோடி நேற்று பேசியுள்ளார். இதைப் பார்த்து சிரிப்பதா அல்லது அவரின் பகல் கனவைப் பார்த்து பரிதாபப் படுவதா என தெரியவில்லை. தமிழ்நாட்டில் பா.ஜ.க. ஜெயிக்கும் என பிரதமரை யாரோ ஏமாற்றியுள்ளனர்.

பா.ஜ.க.,வுக்கு இன்னும் ஒரு வாய்ப்பு கிடைத்தாலும், வரலாறு திருத்தி எழுதப்படும். அறிவியல் பின்னுக்கு தள்ளப்பட்டு பிற்போக்கு கதைகள் புகுத்தப்படும். மக்களின் சிந்தனைகள் மழுங்கடிக்கப்படும். மக்களின் உரிமைகள் பறிக்கப்படும். அம்பேத்கர் எழுதிய அரசியல் சாசனம் காற்றில் பறக்கவிடப்பட்டு, ஆர்.எஸ்.எஸ்.ன் சித்தாந்தம் நாட்டை ஆளும். இதையெல்லாம் தடுப்பது உங்கள் வாக்குதான். இவ்வாறு அவர் கூறினார்.



**பாராளுமன்ற தேர்தலையொட்டி, அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே பழனிசாமி நேற்று சேலம் தொகுதிக்கு உட்பட்ட ஜலகண்டாபுரத்தில், சேலம் தொகுதி கழக வேட்பாளர் விக்னேஷை ஆதரித்து பிரசாரம் மேற்கொண்ட போது, ஒரு ஆண் குழந்தைக்கு 'தீரன் ஆதித்யா' என்று பெயர் சூட்டி ஆசி வழங்கினார்.**

வேங்கைவயல் விவகாரத்தில்

# விசாரணையை 3 மாதத்தில் முடிப்போம்: உயர் நீதிமன்றத்தில் காவல்துறை உறுதி

**சென்னை, ஏப். 17-**

வேங்கைவயல் விவகாரம் தொடர்பான வழக்கில் 3 மாதங்களில் புலன் விசாரணை முடிக்கப்படும் என காவல் துறை தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை அருகே வேங்கை வயல் கிராமத்தில் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 26-ம் தேதி பொதுமக்கள் பயன்படுத்தி வந்த குடிநீர் தேக்க தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டு இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியானது. இந்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியது. இது தொடர்பாக வெள்ளனூர் காவல் துறையினரிடம் புகார் அளிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறை விசாரணை செய்து வந்தது. பின்னர் இந்த வழக்கு சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் இது வரை 159 நபர்களிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஐந்து சிறுவர்கள் உட்பட 31 பேருக்கு டிஎன்ஏ பரிசோதனையும் சிபிசிஐடி போலீசார் மேற்கொண்டனர்.

இது தொடர்பான வழக்கை சிபிஐ-க்கு மாற்றக் கோரி திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டுவைச் சேர்ந்த ராஜ்கமல் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனுவைத் தாக்கல் செய்திருந்தார். மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், வேங்கைவயல் சம்பவம் தொடர்பாக விசாரிக்க, உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி சத்தியநாராயணன் தலைமையில் ஒருநபர் விசாரணை ஆணையம் அமைத்து கடந்த 2023ம் ஆண்டு மார்ச் மாதம் உத்தரவிட்டது.

இந்நிலையில் ராஜ்கமல் தொடர்ந்த வழக்கு, தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி சத்தியநாராயண பிரசாத் அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், இந்த வழக்கில் மாநில அரசு தீவிரம் காட்டாததால், கிராம மக்கள், மக்களவை தேர்தலை புறக்கணிக்க உள்ளதாக அறிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்போது, அரசுத் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் 3 மாதங்களுக்குள் விசாரணை முடிக்கப்படும் என காவல்துறை தெரிவித்திருப்பதாக கூறினார். இதனையடுத்து வழக்கு விசாரணையை நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

# தடுப்பூசியை காலை 11 மணிக்குள் செலுத்த உத்தரவு

**சென்னை, ஏப். 17-**

சுகாதார நிலையங்களில் தடுப்பூசி செலுத்தும் பணிகளை வழக்கமான நேரத்தைக் காட்டிலும் முன்னதாகவே தொடங்கி காலை 11 மணிக்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று தமிழக பொது சுகாதாரத்துறை உத்தரவிட்டுள்ளது.

பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது, அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான மருந்துகளை சேமித்து வைத்திருக்கும் குளிர் பதனக் கிடங்குகள், மருந்தகங்கள், சேமிப்பு கிடங்குகளில் உரிய காற்றோட்ட வசதி இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

அறையின் சுவர்களை யொட்டி மருந்துகளை வைக்காமல், அதிலிருந்து சற்று தள்ளி வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. அதே போன்று, சுகாதார நிலையங்களில் தடுப்பூசி செலுத்தும் பணிகளை வழக்கமான நேரத்தைக் காட்டிலும் முன்னதாகவே தொடங்கி காலை 11 மணிக்குள் நிறைவு செய்ய வேண்டும். இதன் மூலம் வெப்ப அலையால் தடுப்பூசியின் வீரியம் குறையாமல் இருப்பதை உறுதி செய்ய முடியும். அதனுடன், பொது மக்கள், சுகாதாரத்துறை களப் பணியாளர்களுக்கும் அது உகந்த நேரமாக இருக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு, அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி, தருமபுரி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட மேச்சேரி பஸ் நிலைய பகுதியில் தருமபுரி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் ஆர்.அசோகனுக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்திடுமாறு பிரச்சாரம் மேற்கொண்டார்.




இராமநாதபுரம் மக்களவை தொகுதி பா.ஜ.க. கூட்டணியின் வேட்பாளர் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்தை ஆதரித்து, பலாப்பழம் சின்னத்திற்கு, பா.ஜ.க. தேசிய தலைவர் ஜே.பி.நட்டா நேற்று 'ரோடு ஷோ, மூலம் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரித்தார்.

# தேர்தல் பிரசாரத்திற்கிடையே கால்பந்து விளையாடிய முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப். 17-

வடசென்னை தொகுதி தி.மு.க. வேட்பாளர் கலாநிதி வீராசாமியை ஆதரித்து வாக்கு சேகரிக்க சென்றபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் கால்பந்து விளையாடினார்.

தமிழ்நாட்டில் பாராளுமன்ற மக்களவை தேர்தல் ஒரே கட்டமாக வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடைபெறுகிறது.

தேர்தலை முன்னிட்டு அரசியல் கட்சிகளும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது.

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, கொளத்தூர், ஐ.சி.எப். பகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

வடசென்னை தொகுதி வேட்பாளர் கலாநிதி வீராசாமி மற்றும் மத்திய சென்னை தொகுதி வேட்பாளர் தயாநிதி மாறன் ஆகியோருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்குள்ள விளையாட்டு மைதானத்துக்கு சென்று அங்கு பயிற்சி செய்து கொண்டிருந்த கால்பந்து விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

மேலும், அவர்களுக்கு ஏதேனும் வசதிகள் தேவைப்படுகிறதா என்று அவர் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து, அவர் அங்கிருந்த வீரர்களுடன் கால்பந்து விளையாடி மகிழ்ந்தார்.

# அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் மீது எத்தனை புகார்கள் தெரியுமா?

## தமிழ்நாடு தேர்தல் ஆணையம் விளக்கம்

சென்னை, ஏப். 17-

பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மீது சுமார் 200 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 169 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் பாராளுமன்ற மக்களவை தேர்தல் ஒரே கட்டமாக வரும் 19-ம் தேதி நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை ஜூன் 4-ம் தேதி நடைபெறுகிறது. பிரசாரத்திற்கு இன்றே கடைசி நாள் என்பதால் அனைத்து அரசியல் கட்சிகளும் தீவிர பரப்புரையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால், தேர்தல் களம் சூடு பிடித்துள்ளது. இந்த நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் மீது சுமார் 200 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 169 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளதாவது., "பா.ஜ.க. விடம் இருந்து பெறப்பட்ட 51 புகார்களில், 38 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியிடமிருந்து பெறப்பட்ட 59 புகார்களில் 51 மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. தி.மு.க. அளித்த புகாரின் பேரில், ராமேஷ்வரம் கபே குண்டுவெடிப்பு மீதான சரி பார்க்கப்படாத குற்றச்சாட்டுகளுக்காக பாஜக அமைச்சர் ஷோபா கரந்த்லாஜே மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

பிரதமர் நரேந்திர மோடி குறித்து தி.மு.க. அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் தெரிவித்த கருத்துகளுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

சிவிஜில் செயலி மூலம் பொதுமக்கள் தெரிவித்த 2,68,080 புகார்களில் 2,67,762 மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 92% புகார்கள் சராசரியாக 100 நிமிடங்களுக்குள் தீர்க்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

# ஆம் ஆத்மி நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலில் கெஜ்ரிவால் மனைவி

புதுடெல்லி, ஏப். 17-

குஜராத் மாநிலத்துக்கான ஆம் ஆத்மி நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலில் கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதல்வருமான அரவிந்த் கெஜ்ரிவால், அவரது மனைவி சுனிதா கெஜ்ரிவாலின் பெயர் இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ள நிலையில், டெல்லி கலால் கொள்கை முறைகேடு வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டு நீதி மன்றக் காவலில் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதற்கிடையே, அரவிந்த் கெஜ்ரிவாலின் கடிதத்தை படித்து சமூக வலைதளங்களில் விடியோக்களை வெளியிட்டு வரும் அவரது மனைவி சுனிதா நேரடி அரசியலில் களமிறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில், குஜராத் மாநிலத்துக்கான ஆம் ஆத்மி நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலில் சுனிதாவின் பெயரும் இடம்பெற்றுள்ளது. மேலும், சிறையில் இருக்கும் அரவிந்த் கெஜ்ரிவால், மனீஷ் சிசோடியா பெயரும், ஜாமீனில் வெளி வந்துள்ள சஞ்சய் சிங், பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் உள்பட 40 பேரின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளது. டெல்லி, பஞ்சாப், ஹரியானா மற்றும் குஜராத் மாநிலங்களில் உள்ள மக்களவை தொகுதிகளில் ஆம் ஆத்மி போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

## 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி

# இந்தியாவில் அனைத்து மொழிகளிலும் வெளியிடப்பட்ட விழிப்புணர்வு பாடல்

புதுடெல்லி, ஏப்.17-

இந்திய தேர்தல் ஆணையம் சார்பில், 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பாடல் அனைத்து மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

பாராளுமன்ற மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு வரும் 19-ந்தேதி தொடங்கி ஜூன் 1-ந் தேதி வரை 7 கட்டங்களாக நடைபெற உள்ளது. தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்வதற்காக பொதுமக்களிடம் வாக்குப்பதிவு குறித்த பல்வேறு விழிப்புணர்வு பிரசாரங்களை மத்திய, மாநில அரசுகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் சார்பில், வாக்குப்பதிவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு பாடல் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோவில் அமிதாப் பச்சன், சச்சின் டெண்டுல்கர், மாதவன், ரவீணா டான்டன் உள்ளிட்டோர் தோன்றி வாக்குப்பதிவின் அவசியம் குறித்து பேசியுள்ளனர். மேலும் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம் உள்ளிட்ட அனைத்து மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ள பாடல் சமூக வலைதளங்களில் கவனம் பெற்றுள்ளது.

# மீறி பிரசாரத்தில் ஈடுபட்டால்...(1-ம் பக்க தொடர்ச்சி)

எண்ணை தொடர்பு கொள்ளலாம். இந்த எண்ணுக்கு முன்னதாக மாவட்டத்துக்கான எஸ்டிடி தொலைபேசி எண்ணை பதிவிட்டு அழைக்க வேண்டும். மக்களவை தேர்தலுக்கான 1 லட்சத்து 59 ஆயிரத்து 100 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும், 82,014 கட்டுப்பாட்டு கருவிகளும், 88,783 விவிபேட் (வாக்கு ஒப்பு கைச்சீட்டு இயந்திரம்) இயந்திரங்கள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன. விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ. காலமானதை தொடர்ந்து, அந்த தொகுதி காலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதியில் இடைத்தேர்தல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகு தெரிவித்தார்.

## ரூ.162.47 கோடி பறிமுதல்

மேலும், தேர்தல் ஆணையம் தரப்பில் வெளியான அறிக்கையில், தமிழகத்தில் இதுவரை ரூ.1284 கோடி மதிப்பிலான பணம், பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில் ரொக்கம் ரூ.162.47 கோடி (வருமான வரித்துறையால் ரூ.83.63 கோடியும், பறக்கும் படையால் ரூ.78.84 கோடி) பறிமுதல் செய்யப்பட்டது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு மக்களவைப் பொதுத்தேர்தல்கள், 2024 மற்றும் 233.விளவன்கோடு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு 19.04.2024 அன்று காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும். 17.04.2024 அன்று மாலை 6.00 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126-ன் கீழ், பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்:-

(1) தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக் கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது.

(2) யாதொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எப்.எம். ரேடியோ, வாட்ஸ் அப், முகநூல், டிவிட்டர் போன்ற அல்லது இது போன்ற சாதனம் வாயிலாக பொதுமக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

(3) பொதுமக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், யாதொரு இசை நிகழ்ச்சி அல்லது யாதொரு திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித ஏதேனும் பிற கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் யாதொரு தேர்தல் விவகாரத்தையும் யாதொரு நபரும் பரப்புரை செய்யக்கூடாது. இந்த விதிமுறை மற்றும் மேற்கண்ட இரண்டு விதிமுறைகள் எவ்விதத்தில் மீறப்பட்டாலும் 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)-ன் படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

(4) தொகுதி வெளியேயிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் முதலியோர் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் 17.04.2024 அன்று மாலை 6.00 மணிக்கு மேல் அந்தத் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும்.

(5) கல்யாண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பதை கண்டறியப்படும்.

(6) வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், 17.04.2024 அன்று மாலை 6.00 மணி முதல் செயல் திறனற்றதாகி விடும்.

## கிராம் ரூ.6,870-க்கு விற்பனை:

# ரூ.55 ஆயிரத்தை நெருங்கும் ஒரு பவுன் தங்கத்தின் விலை

சென்னை, ஏப். 17-

சென்னையில் நேற்று ஒரே நாளில் தங்கம் விலை சவரன் ஒன்றுக்கு ரூ.640 அதிகரித்து, ரூ.54,960க்கு விற்பனையானது. விரைவில் ரூ.55 ஆயிரத்தை நெருங்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தென் இந்தியாவில் அதிகளவிலான தங்கத்தை வைத்துள்ள மாநிலத்தில் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது. தமிழ்நாட்டில் சென்னை போன்ற முக்கிய நகரங்களில் தங்கத்தின் வர்த்தகம் மிகவும் அதிகமாக உள்ளது. சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது உயர்ந்தும், குறைந்தும் வருகிறது.

இந்நிலையில், தங்கத்தின் விலை ஏறியும், இறங்கியும் வருவது வழக்கம். இதற்கிடையே கடந்த மாதத்தில் இருந்து தங்கம் விலை கிடுகிடுவென அதிகரித்து ஒரு சவரன் ரூ.50,000 கடந்தது. தொடர்ந்து அதிகரித்து வரும் விலை, நடுத்தர மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு எட்டாக்கனியாகி விடும் என்று நினைக்கத்தோன்றும் அளவுக்கு தங்கம் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது அனைத்து தரப்பினர் இடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

அந்த வகையில், ஏப். 14-ம் தேதி ஒரு கிராம் தங்கம் ரூ. 6,855-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு சவரன் தங்கம் ரூ.600 அதிகரித்து ரூ.54,840-க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் தங்கம் விலை சற்று குறைந்து ரூ.54,320-க்கு விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் நேற்று சென்னையில் ஆபரண தங்கத்தில் விலை சவரனுக்கு ரூ.640 உயர்ந்து ரூ.54,960-க்கு விற்பனையானது. ஒரு கிராம் தங்கம் ரூ.80 உயர்ந்து ரூ.6,870-க்கு விற்பனையானது.

தங்கத்தைப் போலவே வெள்ளி விலையும் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் வெள்ளி கிராமுக்கு 50 காசுகள் உயர்ந்து ரூ.89.50-க்கு விற்பனை செய்யப்பட நிலையில், நேற்று வெள்ளி ஒரு கிராம் ரூ.90.50-க்கு விற்பனையானது. மேலும், வெள்ளி கிலோவுக்கு ரூ.1000 அதிகரித்து ரூ.90,500 ஆக உள்ளது.

## மாணவிகளை தவறாக வழிநடத்திய விவகாரம்:

# நிர்மலாதேவி வழக்கில் 26-ம் தேதி தீர்ப்பு

திருவில்லிபுத்தூர்,ஏப்.17-

கல்லூரி மாணவிகளை தவறாக வழிநடத்த முயற்சித்ததாக பேராசிரியை நிர்மலாதேவிக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் ஏப்ரல் 26 தேதி தீர்ப்பு வழங்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை தனியார் கலைக்கல்லூரியில் பேராசிரியையாக நிர்மலாதேவி வேலை பார்த்து வந்தார்.

இந்நிலையில் அவர் மீதான புகாரின் அடிப்படையில் நிர்மலாதேவி மற்றும் மதுரைகாமராஜர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் முருகன், ஆராய்ச்சி மாணவர் கருப்பசாமி ஆகியோர் மீது அருப்புக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

இந்நிலையில், நிர்மலா தேவிக்கு எதிராக 2018ஆம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டு சிபிசிஐடி விசாரிக்கும் வழக்கை பெண் டி.ஐ.ஜி. தலைமையில் சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க வேண்டுமென கணேசன் என்பவர் வழக்கு தொடர்ந்தார். இதுகுறித்த வழக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக மாணவிகளிடம் ரகசிய விசாரணை நடைபெற்றது.

இந்த விவகாரத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, விசாகா குழு அமைக்கப்பட்டுள்ளது என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் புகார் அளிக்காமல் விசாரணை நடத்த முடியாது என கூறி வழக்கு விசாரணையை ஏப்ரல் 26-ம் தேதி தள்ளி வைத்த நீதிபதிகள் அன்று தீர்ப்பு வழங்கப்படும் என தெரிவித்தனர்.



மதுரை பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணனை ஆதரித்து, ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் நடை பயிற்சி மேற்கொண்டவர்களிடம், முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. இறகுபந்து விளையாடி இரட்டை இலைக்கு வாக்கு சேகரித்தார். அருகில் மாவட்ட, பகுதி, வட்ட, சார்பு அணி அ.தி.மு.க.நிர்வாகிகள் உள்ளனர்.